உலக வரலாற்றில் முதன்முறையாக இ-மெயிலில் வெளிவரும் இதழ்

e-magazine

www.aanmeegamalar.com

# ஆன்மிகமலர்

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

மெயில் புக்

மலர்-6 இதழ்-164

ஜுலை 16-31 2023




விருப்ப சந்தா செலுத்த ஸ்கேன் செய்யவும்

# கிருஷ்ணர் பல்வேறு வேடங்கள் எடுத்ததற்கான காரணம்?



# பதினோரு உலகை குறிக்கும் ராஜகோபுரம்

கும்பகோணம் ஸ்ரீசாரங்கபாணி பெருமாள் திருக்கோவிலின் ராஜகோபுரம் மிகவும் பிரம் மாண்டமானது.

வைணவத் திருத்தலங்களில் மிக உயர்ந்த ராஜகோபுரம் என்பது 247 அடி உயரம் கொண்ட ஸ்ரீரங்கம் ராஜகோபுரம் ஆகும்.

அதற்கு அடுத்த படியாக உயரம் மிக்கது, ஸ்ரீவில்லிபுத்தூர் திருக்கோவிலின் ராஜ கோபுரம் ஆகும். நம் தமிழக அரசின் சின்னமாக அந்தக் கோபுரமே இன்றளவும் திகழ்கிறது.

இந்த இரண்டு கோபுரங்களுக்கு அடுத்த படியாக உயரம் மிக்கது கும்பகோணம் சார்ங்க பாணிப் பெருமாள் கோவிலின் ராஜகோபுரம். ஆனால் மற்ற இரண்டு கோபுரங்களைக் காட்டி லும் கும்பகோணம் ராஜகோபுரத்தில் சிற்ப வேலைப்பாடுகள் மிகவும் அதிகம்.

சுமார் 150 அடி உயரம் கொண்ட அந்தக் கோபுரத்தில் உள்ள பதினொரு அடுக்குகள் வைகுண்டத்தை நோக்கிய பாதையான அர்ச்சிராதி மார்க்கத்தில் உள்ள பதினொரு உலகங்களைக் குறிப்பதாகப் பெரியோர்கள் சொல்லுவார்கள்.



# மோதிரவிரலுக்கு முக்கியத்துவம் ஏன்

நமது விரல்களில் மோதிர விரலில் அணியப்படும் மோதிரம், இருதய நோய், வயிற்றுக் கோளாறுகள் போன்ற வியாதிகளை நீக்குகிறது. ஆண் பெண் இன விருத்தி உறுப்புகளுக்கு சக்தி அளிக்கிறது.

சுண்டு விரலில் மோதிரம் அணியக் கூடாது. இதனால் இதயசக்தி ஓட்டம் தடைபடும்.

நடு விரல் என்று சொல்லப்படும் பாம்பு விரல் உங்களை பற்றி குறிப்பதால், நடு விரலில் மோதிரம் அணிந்தால் நீங்கள் எடுக்கும் அனைத்து முயற்சி களுக்கும் நீங்களாகவே தடைகளை ஏற்படுத்திக் கொள்கிறீர்கள் என்று பொருள்.

மேலும் நம்முடைய நான்காவது விரலை ஏன் மோதிர விரல் என்கிறோம் தெரியுமா?

நம் ஐந்து விரல்களுமே, நமது ஐந்து சொந்தபந்தங் களை குறிக்கின்றன

கட்டை விரல் உங்களது பெற்றோரை பற்றியும், ஆள்காட்டி விரல் உங்களின் சகோதரங்களை பற்றியும், நடு விரல் உங்களை பற்றியும், மோதிர விரல் உங்களின் வாழ்க்கை துணையை பற்றியும், சிறிய விரல் (சுண்டு விரல்) உங்களின் பிள்ளைகளை பற்றியும் குறிக்கிறது.

அதாவது கணவன் மனைவி எப்போதும் ஒன்றாக பிரியாமல் இருக்க வேண்டும் என்பதற்க்காகவே திருமண சடங்ககுளில் மோதிர விரலில் மோதிரம் அணிய வேண்டும் என்பதை இது உணர்த்துகிறது.



ஆன்மிகமலர்.காம்
ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

# பணத்தை வசியம் செய்யும் மந்திரம்

வசியம் என்பது மனிதர்களை மட்டும் வசியப்படுத்த பயன்படுத்தும் முறை அல்ல, வசிய வார்த்தைகள் வசிய மந்திரங்கள், நமது பணத்தையும் வசியப்படுத்தி அந்தப் பணத்துடன் இன்னும் அதிகமான பணங்களைச் சேர்த்து நம்மிடம் மீண்டும் வரவைக்கவும் பயன்படுத்தும் முறையாக உள்ளது.

நாம் வீட்டில் செலவுக்காகவோ அல்லது வேறொரு நபருக்கு கடனாகவோ பணத்தை கொடுக்கும் போது, ஒரு சில தாந்திரிகம் மாந்திரீக வார்த்தைகளை பயன்படுத்தினால், உங்கள் கையில் இருந்து வெளியேறும் பணம் மறுபடியும் பல மடங்காக பெருகி உங்களிடமே வந்து சேரும்.

நாம் பயன்படுத்து இந்த வார்த்தைகள் வசியம் மந்திரம் என்று கூறுவார்கள் இந்த மந்திரம் சொல்வதன் மூலம் பணம் உங்கள் இடம் வசியமாகி இருக்குமாம்.

**“ஓம் ஹ்ரீம் ஹும் நமஹ”**


என்ற இந்த மந்திரத்தை உச்சரிக்க வேண்டும் இந்த மந்திரத்தை உச்சரிக்கும் போது பணத்தை உங்களின் நெஞ்சுக்கு நேராக வைத்து மனதார உங்கள இஷ்ட தெய்வம், குல தெய்வத்தை நினைத்து இந்த பணம் திரும்ப எனக்கு பல மடங்காக பெருகி வர வேண்டும் என்று எண்ணிக் கொண்டே சந்தோஷமான மன நிலையுடன் கொடுக்க வேண்டும்.

ஆனால் நாம் பணம் கொடுப்பது பொது வெளியாக இருக்கும்போது இவ்வாறு மந்திரத் தை சொல்லி வேண்டிக் கொண்டிருக்க முடியாது.

பொதுவெளியில் இவ்வாறு மந்திரம் உச்சரிக்க தயக்கமாக இருப்பவர்கள் வீட்டில் இருந்து பணத்தை எடுத்துச் செல்லும்போது இந்த மந்திரத்தை சொல்லி உங்கள் இஷ்ட தெய்வம் அல்லது குலதெய்வத்திடம் வேண்டிக் கொண்டு பின் பணத்தை கொண்டு செல் லுங்கள்.

பின் நீங்கள் யாரிடம் பணம் கொடுக்க போகி றீர்களோ அவர்களிடம் பணம் கொடுக்கும் போது இந்த பணம் திரும்ப என்னிடம் வர வேண்டும் என்று நினைத்தாலே போதும்.






## பயம், பில்லிசூன்யம், கண்திருஷ்டி, வியாபார நஷ்டத்தை போக்கும்

# சுதர்சன சக்கர வழிபாடு

அம்பரீஷன் என்ற மன்னன் பெருமாளின் மீது மிகவும் பற்று கொண்டவர். அவர் கனவில் தோன்றிய திருமால், ‘எனது சுதர்சன சக்கரத்தை வழிபடு; அவர் எந்த நேரத்திலும் உனக்கு நல்ல பலனை கொடுப்பார்’ என்று கூறி மறைந்தார். அன்று முதல் சுதர்சன சக்கரத்தை வழிபட ஆரம்பித்து ஏகாதசி விரதமும் இருந்து மறுநாள் துவாதசி அன்று காலை உணவு உட்கொண்டு விரதத்தை முடிப்பார் மன்னர். அவருடன் மக்களும் இவ்விரதத்தை செவ்வனே மேற்கொண்டனர். இந்த மன்னனை சோதிக்க விரும்பிய துர்வாச முனிவர் ஒருநாள் அரண்மனைக்கு வந்து மன்னனுடைய ஏகாதசி விரதத்துக்கு இடையூறு செய்தார். அதோடு, ஒரு பூதத்தை தோற்றுவித்து மன்னனை விழுங்க உத்தரவிட்டார்.

ஆனால், அம்பரீஷன் தினமும் வணங்கிவரும் சுதர்சனர் மன்னரைக் காப்பாற்ற சீறிப் பாய்ந்து பூதத்தைக் கொன்றுவிட்டு அதை அனுப்பிய துர்வாச முனிவரையும் துரத்தினார். அதைக் கண்டு வெகுண்ட முனிவர் ஓடிச்சென்று பெருமாளை சரணடைந்தார். நாராயணன் அவரை அம்பரீஷிடம் மன்னிப்பு கேட்கச் சொன்னார்.

அதன்படியே முனிவர் செய்ய, அம்பரீஷன் சுதர்சனரை போற்றி பதினொரு சுலோகங்கள் பாடினார். அதைக்கேட்டு சுதர்சனர் அமைதியானார்.

திருமாலின் பஞ்ச ஆயுதங்களான சுதர்சனம், பாஞ்ஜசன்யம், கௌமோதகீ, நந்தகம், சார்ங்கம் போன்றவை அவர் பணிகளை செய்யஎப்பொழுதும் தயாராக இருக்கும். இந்த ஐந்தும் ஐந்துவிதமான ஆயுதங்களாகும்.

இந்த ஐந்து ஆயுதங்களில் முதன்மையானது சுதர்சனமாகும், பஞ்சாயுதங்களில் முதன்மையான சுதர்சனத்தை சக்கரத்தாழ்வார் என்றும் அழைக்கப்படுகின்றன.

எனவே சுதர்சன சக்கரம் அல்லது சக்கரத்தாழ்வாரை தொடர்ந்து வழிபட்டு வந்தால், மானிடப் பிறவியில் ஏற்படும் நோய்கள், மனஅமைதியின்மை எதிலும் தோல்வி, மரணபயம், பில்லி, சூனிய பாதிப்புகள், வியாபாரத்தில் நஷ்டம், கண் திருஷ்டி, முன்னேற்றத் தடை போன்றவை சட்டென விலகிச் செல்லும் என்பார்கள்.




## நிலம் சம்பந்தப்பிரச்சனையால் அவதிப்படுகிறீர்களா?

# ஒருபிடி மணலில் தோஷத்தை தீர்க்கும் சிவஸ்தலம்

இரணியாட்சன் என்ற அரக்கன் பூமித்தாயைச் சுருட்டி ஒளித்துவைத்தான். பூமாதேவியை மீட்க பெருமாள் வராக அவதாரம் எடுத்தார், இறுதியில் இரணியாட்சன் கொல்லப்பட்டு பூமாதேவி மீட்கப் பட்டாள்.

இரணியாட்சன் தன்னை தீண்டிய பாவம் பூமி தாய்க்கு ஏற்பட்டது, தனது பாவத்தை போக்க சிவபெருமானால் தான் முடியும் என்றெண் னிய பூமித்தாய், விருதுநகர் மாவட்டம், அருப்புக் கோட்டையிலிருந்து சுமார் 14கி.மீ. தொலைவில் உள்ள திருச்சுழி அருள்மிகு திருமேனி நாதரை நாடினார்.

இத்தலத்திற்கு வந்து தீர்த்தத்தை ஏற்படுத்தி நீராடி சிவ வழிபாடு செய்தாள், இதனால் இரணி யாட்சன் தன்னைத் தீண்டிய பாவம் தீர்ந்தாளாம் பூமிப் பிராட்டி.

பூமித்தாய்க்கு ஏற்பட்ட தோஷத்தை நீக்கிய இத்தலத்து சிவபெருமானை வழிபடுவோருக்கு, சகல தோஷங்களும், ஏழேழு ஜென்மப் பாவங் களும் விலகிவிடும் என்பது ஐதீகமாக உள்ளது.

அத்துடன், பூமிப் பிராட்டி வழிபட்ட இந்தத் தலத்துக்கு வந்து திருமேனிநாதரை வழிபட்டால், நிலம் சம்பந்தமான பிரச்னைகள் தீர்ந்து, நிம்மதி யாக வாழலாம் என்ற நம்பிக்கையும் உண்டு.




விவசாய நிலம், வீட்டுமனை ஆகியவற்றில் ஏதேனும் சிக்கல், விளைச்சல் குறைபாடு போன்ற பிரச்னைகள் இருந்தால், குறிப்பிட்ட இடத்திலிருந்து ஒருபிடி மண் எடுத்து வந்து, சிவனாரின் சந்நிதியில் வைத்துப் பிரார்த்திக்க வேண்டும்.

பின்னர் அந்த மண்ணை எடுத்துச் சென்று, சம்பந்தப்பட்ட நிலத்தில் கலந்துவிட்டால், நிலம் சம்பந்தப்பட்ட பிரச்னைகள் நீங்கும் என்பது ஐதீகமாக உள்ளதால், இந்த நடைமுறை கடை பிடிக்கப்பட்டு வருகிறது.

பிரச்சனைக்குரிய நிலம் விவசாய பூமி எனில் வேளாண்மை செழிக்கும்; விளைச்சல்பெருகும். வீட்டுமனை எனில், அதிலுள்ள தோஷங்கள், குறைகள் நீங்கும் என்கின்றனர் பக்தர்கள்.

www.aanmeegamalar.com




## வயிற்று பிரச்சனைகளை தீர்க்கும் சிவன்

# ஆறு பிரதோஷத்தைக் கண்டால் புத்திரபாக்கியம் அருளும் அற்புத ஸ்தலம்

சிவபெருமான் திருமணத்தின்போது அனைத்து தேவர்களும் முனிவர்களும், புண்ணியஸ்தர்களும் கயிலையில் கூடியதால், வடதிசை மற்றும் தென்திசையில் சமநிலையில் மாற்றம் ஏற்பட்டது.

இதை சமன் செய்யும் பொருட்டு, சிவபெருமானின் கட்டளைப்படி தென் திசை நோக்கி அகத்தியர் பயணம் மேற்கொண்டார், இவ்வாறு இவர் தென்திசை நோக்கி வரும்போது, நித்திய பூஜைகளுக்காக நிறைய சிவலிங்கங்களை பிரதிஷ்டை செய்து வழிபட்டார்.

இவ்வாறு அகத்தியர் தங்கி வழிபட்டு, பிரதிஷ்டை செய்த சிவஸ்தலங்கள் எல்லாம் அகத்தீஸ்வரம் எனச் சிறப்பிக்கப்படுகின்றன.

அந்த வகையில் மதுராந்தகத்திலிருந்து சுமார் 20 கி.மீ. தொலைவில் அமைந்திருக்கும் ஊர் புத்திரன் கோட்டை. இவ்வூரில் வீற்றிருக்கும் அருள்மிகு அகத்தீஸ்வரர் ஆலயம் மிகவும் சிறப்பு வாய்ந்த ஸ்தலமாக கருதப்படுகிறது.

அகத்தியர் இத்தல சிவனாரை வழிபட்டதற்கு சாட்சியாக, கருவறை வாயிலின் மேல் அகத்தியர் சிவபெருமானை பூஜிப்பது போன்ற புடைப்புச் சிற்பம் காணப் படுகிறது.

அகத்தியரின் பெயரைத் தம்முடன் சேர்த்துக் கொண்டிருக்கும் அகத்தீஸ்வர பெருமான், அகத்தீயினை, அதாவது நம் மனம் எனும் அகத்தைத் தீயெனச் சுட்டெரிக்கும் பேராசை, பொறாமை போன்ற அனைத்தையும் அணைக்கும் அருள் திறம் கொண்டவராகத் திகழ்கிறார்.

அம்பாளின் திருநாமம் முத்தாரம்பிகை. கல் வெட்டுகள், மரகத வடிவுடை நாச்சியார் என்று குறிப்பிடுகின்றன.

பாண்டிய மன்னர்களால் திருப்பணி செய்யப் பட்ட கோயில் என்பதையும் கல்வெட்டுத் தகவல்கள் கூறுகின்றன.

இங்கு வந்து, சிவனாரை வழிபட்டுச் சென்றால் வயிறு தொடர்பான பிணிகள் நீங்கும் என்பது பக்தர்களது நம்பிக்கை. புத்திர தோஷத்தால் வருந்திய சோழ மன்னன் ஒருவன், இங்கு வந்து வழிபட்டுக் குழந்தை பாக்கியம் பெற்றதாக கூறப்படுகிறது.

எனவே இத்தலம், புத்திர தோஷம் நீக்கும் தலமாகத் திகழ்கிறது, மேலும் இத்தலத்தில் தொடர்ந்து ஆறு பிரதோஷ தினங்களில் இங்கு வந்து சிவபெருமானையும் அம்பிகையையும் தரிசித்து வழிபட்டால், புத்திரதோஷம் நீங்கி, குழந்தை பாக்கியம் கிடைக்கும், பிள்ளைகள் நீண்ட ஆயுளுடன் ஆரோக்கியமாக வாழ்வர் என்பது நம்பிக்கை.




# மனிதப் பிறவி எதற்கு? யோசித்தால் உண்மை விளங்கும்

இறைவன் மூலப் ப்ருக்ருதியை வைத்து, அதில் ஜீவனை கர்ப்பமாகச் செலுத்தி, உலகைப் படைக்கிறார்.

(ப்ருக்ருதி என்பது என்ன என்று இந்து புராணம் இதிகாசங்களில் தெளிவாககூறப்பட்டுள்ளது, "இயற்கை, உடல், பொருள், தனித்துவமான பிரபஞ்சம்" ஆகியவற்றை ப்ருக்ருதி என்று குறிப்பிட்டுள்ளது.)

ப்ருக்ருதிக்கும் ஜீவனுக்கும் ஆதியோ, அந்தமோ கிடையாது.

பயன்கள், பயன்தரும் செயல்கள், அந்தச் செயல்களைச் செய்யக் கூடிய கருவிகள், இவற்றுக்கெல்லாம் ப்ருக்ருதியே காரணமாகிறது என்றும், அந்தச் செயல்களால் ஏற்படும் இன்ப–துன்பங்களை அனுபவிப்பதற்கு ஜீவனே காரணமாகிறான் என்றும் பகவத் கீதை கூறுகிறது.

ஒரு ஜீவன், ப்ருக்ருதியைக் காரணமாகக் கொண்ட உடலில் புகுந்து பிறவி எடுக்கிறது.முக்குணங்களில் இருக்கும் பற்றுதலால் ஜீவன் இன்பத்தையும், அதன் தொடர்ச்சியான துன்பத்தையும் அனுபவிக்கிறான். இப்படி ஒரு பிறவியை, வாழ்க்கையை, பகவான் அவனுக்கு எதற்காகக் கொடுக்கிறார்? இதில் ஏதோ ரகசியம் இருக்கிறது.

உலகம் படைக்கப்பட்டிருக்கிறது. நாமும் படைக்கப்பட்டிருக்கிறோம். என்றாவது ஒரு நாள் தனிமையில் அமர்ந்தோ, அல்லது நம்மோடு ஒத்த எண்ணம் உடையவர்களின் நடுவில் இருந்தோ, நம் பிறவியின் பயனைப் பற்றி ஆராய்ந்து இருப்போமா? அதை ஒவ்வொருவரும் செய்ய வேண்டும். ஒரு பொருள் எதற்காகப் படைக்கப்பட்டதோ, அதற்காகவே பயன்படுத்தப்பட வேண்டும். அது மாறுமானால், அந்தப் பொருள் சிறக்காது.

நம்முடைய குரல் பாடுவதற்கும், பேசுவதற்கும் உள்ளது. ஆனால் வெகு நேரம் ஒரு கரடியைப் போலவோ, ஒரு நாயைப் போலவோ, கத்திக் கொண்டோ குரைத்துக் கொண்டோ இருந்தால், அந்தக் குரல் வளமாக இருக்குமா? சீக்கிரத்தில் தொண்டை கட்டிப் போகும். அதே போல, நாம் படைக்கப்பட்டது எதற்காகவோ, அதற்கே உபயோகப்பட வேண்டும். ஆனால், அதை விடுத்து மற்ற பயன்களுக்காக நாம் மிகவும் பாடு படுகிறோம்.

பத்து தலைமுறைக்கு சொத்து சேர்க்கிறோம்.

ஜாதி என்ற மறைபொருளால் பிரிந்து செல்கிறோம்.

வசதியான வளமான வாழ்க்கைக்கு மற்றவர்களை பலிகடா ஆக்கி சுகபோக வாழ்க்கை வாழ்கிறோம்.

பதவி, அதிகாரம், போன்றவற்றை சுயநலத்துடன் பயன்படுத்துகிறோம்.

ஆடை, ஆபரணங்களை வைத்து மற்றவர்களை எடைபோடுகின்றோம்.

வசதி, வாய்ப்பு, பொருள், அதிகாரம், பதவி உள்ளவர்களை மேலோர் என்று எண்ணுகிறோம்.

இதுபோன்ற அனைத்தும் நாம் பிறந்ததற்கான காரணத்தை மறைத்து இன்னும் அதிகப்படியான சுமையை அடுத்துவரும் பிறவிகளில் கூட வைப்பதாகவே அமையும்.

இனிவரும் காலங்களில் நாம் பிறவியின் நோக்கத்தை அறிந்து கொள்ளும்வகையில், உடலுக்கு மட்டும் சுகம் தரும் விஷயங்களையும், அந்த நேரத்திற்கு மனதிற்கு திருப்தி தரும் செயலை செய்வதை விட்டுவிட்டு, நம் செயலால், பூமிக்கும், பூமியில் உள்ள உயிரினங்கள், மனிதர்கள், போன்றவர்களுக்கு பயன்தரும் செயலை செய்ய ஆரம்பித்தால் போதும், நம் பிறவியின் நோக்கம் என்ன என்பது தெளிவாக தெரிந்துவிடும்.

மனிதப் பிறவியில் இந்த உடல் அனுபவிப்பதற்காக மட்டும் என்று எண்ணக்கூடாது.

இந்த உடலை சீராகப் பயன்படுத்தி ஜீவாத்மாவை இறைவனுடன் கலக்க மட்டுமே இந்த உடல் ஒரு கருவியாக கிடைத்துள்ளது என்பதை அறிந்து கொள்ள வேண்டும்.

இந்த உலகில் மனிதப் பிறவிக்கும் மேலான பிறவி கிடையாது.

மனிதப் பிறவியிலும் ஜீவாத்மாவை இறைவனுடன் கலக்காமல், உடலின் சுகபோகம், ஆசை, பந்த பாசம், சொந்த பந்தம் என்று மனிதன் தன் உடலை அர்த்தமற்ற விஷயங்களுக்கு பயன்படுத்தினால், உடலுக்கு கொடுக்கப்பட்ட காலம் முடிந்ததும் மரணம் என்ற நிலையை அடைந்து, இந்த உடலை பயன்படுத்தி செய்த தீய செயல்களுக்கும், அர்த்தமற்ற விஷயங்களால் ஏற்பட்ட தீமைகளையும், அடுத்த பிறவியில் ஜீவாத்மா அவசியம் வேறு ஏதேனும் உலகப் பிறவி எடுத்து அனுபவிக்க வேண்டும்.

ஒரு உயிரினம் இறக்கும் பொழுது அதன் கர்ம வினைப்பயன்களுக்கு ஏற்ப அடுத்த பிறவி அமைகிறது. ஒருவர் நல்ல செயல்களைச் செய்தால், அவர் உயர் உயிரினமாகப் பிறப்பார். கேடு செய்தால் கீழ் உயிரினமாகப் பிறப்பார். பிறவிச்சுழற்சி ஒரு கொடுமையாகப் பார்க்கப்படுகிறது.

ஒரு ஜீவனின் இறுதி நோக்கம் இந்த பிறவிச் சுழற்சியிலிருந்து விடுபட்டு விடுதலை அடைந்து, மெய்பொருளோடு சேர்வது அல்லது மோட்சம் அடைவது ஆகும்.




உதாரணத்திற்கு, சிந்திப்பதற்கு மட்டும் ஒன்றை சொல்லலாம்....

ஒருமனிதன் தனது வயிற்று பசிக்கு 10 ரூபாயை பயன்படுத்தி சாலையோர உணவகத்தில் தனது பசியை போக்கிக் கொள்ளலாம், அதே இன்னொருவன் 100 ரூபாய் பயன்படுத்தி ஒரு நடுத்தர ஓட்டலில் பசியை போக்கிக் கொள்ளலாம், இன்னும் ஒருவன் 1000 ரூபாய் பயன்படுத்தி ஒரு நட்சத்திர ஓட்டலில் பசியாறலாம், அதிகப்படியாக பணம் உள்ளவன், பல ஆயிரம், பல லட்சங்கள் செலவழித்து தங்க தட்டில், வெள்ளி டம்ளரில் நவ நாகரீகமான உணவகத்தில் நாக்கு வரை செல்லும் சுவை மிகுந்த சுவையான உணவை சாப்பிடலாம்.

ஆனால் மேற்கண்ட அனைவருக்கும் தீருவது ஒன்றே ஒன்று மட்டுமே வயிற்று பசி, இதில் சுவை என்பது நாக்கை தாண்டும் வரைதான் தெரியும், நாக்கை தாண்டியதும் மேற்கண்ட அனைவரும் உண்டது வயிற்றை நிரப்பும் ஏதோ ஒரு பொருளை மட்டும்தான்.

மனித வாழ்க்கையில் தேவையற்ற விஷயங்களுக்கு முக்கியத்துவம் கொடுப்பதை விட்டுவிட்டு இந்த உடலை பயன்படுத்தி பிறவிக் கடலை கடந்து இறைநிலையுடன் ஒன்றிணைய முற்படுவோம்.

# அகஸ்தியர் விந்திய மலையை அதன் அளவைக் குறைக்கும்படி கட்டளையிடுகிறார்

விந்தியாசவத்தால் உண்டான பிரச்சனையை அகஸ்தியருக்குத் தெரிந்ததும், காசியை விட்டு வெளியேறிய பிறகு, தனது வாழ்நாளில் தனக்கு மிகவும் பிடித்த நகரத்தை மீண்டும் ஒருமுறையாவது பார்க்க முடியாது என்பதை முழுமையாக அறிந்திருந்தும், தெய்வங்களுக்கு உதவ ஒப்புக்கொண்டார். விந்தியாச்சலத்திற்குச் செல்வதற்கு முன், அவர் பைரவரிடம் அனுமதி கேட்டார். பின்னர் அவர் சூரியனின் பாதையை விந்தியாசலம் தடுத்த இடத்தை அடைந்தார். அவருடன் அவரது மனைவி லோபாமுத்ராவும் சென்றார்.

விந்தியாசலத்தை அகஸ்தியர் கோபமாகப் பார்த்துக் கொண்டிருப்பதைக் கண்டு பயந்து, உடனே தன் அளவைக் குறைத்தது விந்தியாசலம், அகஸ்திய முனிவர் எந்த முயற்சியும் செய்யாமல் தனது நோக்கம் நிறைவேறியதில் மகிழ்ச்சி அடைந்தார். ஆனால் அவர் அந்த இடத்தை விட்டு வெளியேறியவுடன் விந்தியாசலம் தனது பிரம்மாண்டமான அளவை மீண்டும் பெறுவார் என்பதை அவர் நன்கு அறிந்திருந்தார்.

அதனால் சூரியனின் பாதையை விந்தியாச்சல் தடுக்க முடியாதபடி ஏதாவது செய்ய முடிவு செய்தார். அவர் ஒரு திட்டத்தை வகுத்தார், அதன்படி அவர் விந்தியாச்சலிடம் தனது புனித யாத்திரையை முடித்து திரும்பும் வரை வளராமல் இதே அளவில் காத்திருக்குமாறு அறிவுறுத்தினார். சிறிது நேரத்தில் அகஸ்தியர் திரும்பி வருவார் என்று கருதி விந்தியாசலம் ஒப்புக்கொண்டார்.




விந்தியாச்சல் அகஸ்தியரின் கோபத்திலிருந்து தப்பித்த அதிர்ஷ்டத்திற்கு நன்றி கூறினார். இல்லையெனில் அது தனது இருப்புக்கு அச்சுறுத்தலாக இருந்தது. அகஸ்திய முனிவர் பின்னர் திரும்பி வராமல் சென்றுவிட்டார், விந்தியாசலம் அவரது வருகைக்காக காத்திருந்தார். இந்த வழியில், பாதை தெளிவாகியது. சூரியன் மீண்டும் அதன் சுற்றுப்பாதையில் எந்த பிரச்சனையும்



இல்லாமல் சுதந்திரமாக செல்ல முடிந்தது, இதன் விளைவாக உலகம் இயல்பு நிலைக்கு திரும்பியது.

மறுபுறம், அகஸ்தியருக்குப் பிரியமான காசியை விட்டுச் சென்றதில் சிறிதும் மகிழ்ச்சியடையாத அகஸ்தியர், சீக்கிரம் அங்கு சென்றுவிட வேண்டும் என்று ஆசைப்பட்டார். ஆனால், தன் ஆசை நிறைவேறாமல் போகிறது என்பது அவனுக்குத் தெரியும். சுற்றித் திரிந்தபோது, அவர் கோலாப்பூரை அடைந்தார். அங்கு அவர் மகாலக்ஷ்மி தேவியை வணங்கினார். மகாலக்ஷ்மி தேவி தோன்றியபோது, அவரால் தற்போதைய வாழ்க்கையில் காசியை அடைய முடியுமா என்று கேட்டார். மகாலக்ஷ்மி தேவி பதிலளித்தாள் வரவிருக்கும் பத்தொன்பதாம் துவாபரத்தில், நீங்கள் வியாசராக அவதரித்து, வேதங்கள் மற்றும் புராணங்களின் பிரச்சாரத்திற்கு பெரும் பங்களிப்பை வழங்கும் போது உங்கள் விருப்பம் நிறைவேறும். இங்கிருந்து வெகு தொலைவில் கார்த்திகேயரின், புனிதன் தலம் உள்ளது. அங்கு சென்று கார்த்திகேய பகவானை தரிசித்து, காசியின் மர்மமான அம்சங்களை அவர் உங்களுக்கு அவிழ்த்து விடுவார்.

அகஸ்திய முனிவரும் அவரது மனைவி லோபாமுத்திரையும் அக்காலத்தில் கார்த்திகேயர் வாழ்ந்த ஸ்ரீ ஷைல பர்வதம் என்ற மலைக்குச் சென்றனர்.

## காசி புனித யாத்திரைக்கான இடம்

சிறிது நேரம் பயணம் செய்து இருவரும் ஸ்ரீ ஷைல் மலைக்கு அருகில் வந்தனர். மலையை நோக்கி விரலைக் காட்டி அகஸ்தியார் தன் மனைவியிடம் கூறினார் இந்த மலையின் சிகரங்களைக் காணும் பாக்கியம் பெற்ற ஒருவர், இரண்டாவது பிறவி எடுப்பதில்லை. லோபாமுத்திரை வியப்புடன் பதிலளித்தாள் 'இந்த மலையின் தரிசனமே முக்தி அளிக்கும் வல்லமை வாய்ந்தது என்றால், காசிக்கு ஏன் ஏங்குகிறீர்கள்?" அப்போது அகஸ்திய முனிவர் இன்னும் பல புண்ணியத் தலங்கள் முக்தி தரக்கூடியவை என்று தெளிவுபடுத்தினார்.






பிரயாக அப்படிப்பட்ட ஒரு இடம். இது மனிதனுக்கு புருஷார்த்தம் ஆகிய நான்கும் அளிக்க வல்லது தர்மம், அர்த்தம், காமம் மற்றும் மோட்சம். பிரயாகை தவிர, நைமிசாரண்யம், குரு க்ஷேத்திரம், கங்காத்வார், அவந்தி, அயோத்தி, மதுரா, துவாரகா, பத்ரிகாஷ்ரம், புருஷோத்தம க்ஷேத்திரம் போன்ற பல புண்ணிய ஸ்தலங்கள் மனிதனுக்கு முக்தி அளிக்கக் கூடியவை. ஆனால் காசிக்கு நிகரான இடங்கள் எதுவும் காசிக்கு நிகராக முடியாது.

## பகவான் கார்த்திகேயா காசியின் மகத்துவத்தை விவரிக்கிறார்

அகஸ்திய முனிவரும் அவரது மனைவி லோபாமுத்ராவும் ஸ்ரீ ஷைல் மலையைச் சுற்றி வந்து லோஹித் மலையில் ஏறி பகவான் கார்த்தி கேயனைக் கண்டனர்.

இருவரும் வேதப் பாடல்களைப் பாடி கார்த்தி கேயனைப் புகழ்ந்தனர். கார்த்திகேய பகவான் அவர்களின் பக்தியில் மிகவும் மகிழ்ச்சியடைந்து கூறினார் ஓ மரியாதைக்குரிய முனிவரே! காசியின் முக்கியத்துவத்தை நீங்கள் புரிந்து கொள்ளலாம்.

எனது விருப்பத்தின்படி எந்த இடத்தையும் நான் அடைய முடியும் என்றாலும், இங்கே நான் காசியை அடைவதற்காக இந்த கடுமையான தவம் செய்கிறேன். இன்றுவரை என் முயற்சி யில் நான் வெற்றிபெறவில்லை என்பதை ஒப்புக் கொள்ள வேண்டும்.

துறவறம் மேற்கொள்வதன் மூலம் காசியை அடைய முடியும் என்று எந்த உடலும் நினைத்தால் அது முற்றிலும் தவறு. மகாதேவனின் அருள் இல்லாதவரை காசியை அடைய முடியாது.

காசியை அடையும் பாக்கியம் பெற்ற ஒருவர் எந்த சூழ்நிலையிலும் உயிருடன் இருக்கும் வரை அதை விட்டுவிடக்கூடாது.

ஓ அகஸ்தியரே! காசியில் வாசம் செய்யும் பாக்கியம் கிடைத்ததால் நீங்கள் பாக்கியசாலி. காசிக்கு அருகாமையில் இருப்பதால். புனிதம் பெற்ற உனது உடலைத் தொட எனக்கு அனுமதியுங்கள்' என்றார்.

இதைச் சொன்ன கார்த்திகேயர். காசியின் புனித மண்ணைத் தொடுவது போல அகஸ்தி யரின் உடலின் பல்வேறு பாகங்களைத் தொட்டார்.

காசியின் பல்வேறு அம்சங்கள், பல்வேறு கோயில்கள் மற்றும் தெய்வங்கள், அவை எவ் வாறு உருவானது என்பதையும் காசி காண்டம் விரிவாக விவரிக்கிறது.

– காசி பயணம் தொடரும்

பி.எஸ்.வெங்கடரமணன்
தொலைபேசி எண்: 9839061178

● ஆன்மிகம் ● தத்துவம் ● உடல்நலம் ● பலன்கள்
புத்தம் புதிய ஆன்மீக செய்திகளை தினமும் படியுங்கள்
www.aanmeegamalar.com
ஆன்மிகமலர்.காம்




# கிருஷ்ணர் பல்வேறு வேடங்கள் எடுத்ததற்கான காரணம்?

உலகம் என்பது, நல்லதும் பொல்லாததுமாக, அநேக விதமான மனப்போக்கை உடைய மனிதர் களால் அமைந்திருக்கிறது.

இந்த உலகத்தில் வீரனும், சூரனும், திருடனும், ஸ்திரிலோலனும், பேதையும், உழைப்பாளியும், கிழவனும், குழந்தையும், இறுமாப்புடையவனும், பரோபகாரியும், மனமுருகியவனும், கல்நெஞ் சனும், கஞ்சனும், ஊதாரியும், மூடனும், கல்விமா னும், யோகியும், ஞானியுமாக பலவிதமான மன நிலையை உடையவர்கள் இந்த உலகத்தில் வாழ் கிறார்கள். இதில் நல்லவர்களை எளிதாக தெய்வ அவதாரங்களால் ஆகர்ஷிக்க முடியும்.

ஆனால், தீய அம்சம் உள்ளவர்களை முற்றிலும் நல்ல அம்சங்களை கொண்ட ஒரு மகாத்மா அல்லது தெய்வ அவதாரத்தால் ஆகர்ஷிக்க முடியாமலே போகலாம்.

காரணம்,

ஒரு திருடனுக்கு இன்னொரு திருடனைப் பற்றிய கதையே முன்னுதாரணமாக இருக்கு.

ஒரு உல்லாச புருஷனுக்கு இன்னோர் உல்லாச புருஷனின் கேளிக்கைகளே சுவாரசியமாக இருக்கும். இதனால் இவர்களை எளிதாக தெய்வ அவதாரங்களால் ஆகர்ஷிக்க முடியாமல் போக அதிக வாய்ப்பு இருக்கிறது.

நல்லவர்களை மட்டுமின்றி மற்றோரையும் கவரவேண்டுமென்று ஸ்ரீகிருஷ்ண பகவான் எண்ணியதால்தான், ஜாரசோர சிகாமணியாக, கபடனாக, மாயனாக, தந்திரசாலியாக, என்று எல்லா வேஷமும் போட்டான்.

பற்பல போக்குகொண்ட மக்கள் எல்லாரையும் தனது வகைவகையான லீலைகளால்தனித்தனி யாக ஆகர்ஷித்துத் தன்னுடைய கருணைக்கும் அதன்மூலம் ஞானத்துக்கும் பாத்திரமாக்கி கடைத்தேற்றவைக்க மகாவிஷ்ணுவால் உரு வானதுதான் ஸ்ரீகிருஷ்ணாவதாரமாகும், இந்த அவதாரம் நல்லவர், தீயவர் என அனைவரையும் ஆகர்ஷித்ததால் இந்த அவதாத்தை பரிபூரணாவதாரம் என்று அழைப்பார்கள்.

# வாரியாரின் அசத்தல் பதில்

## காலைதொட்டு வணங்கி சென்ற நாத்திகர்கள் கூட்டம்




வாரியார் காலத்தில் பகுத்தறிவு என்ற போர்வையில் வாய்க்கு வந்தவற்றை கேள்விகளாக தொடுக்கும் பழக்கம் நிலவியது.

எங்கு இந்து சமய சொற்பொழிவுகள் நடைபெற்றாலும், ஒரு கூட்டம் வேண்டுமென்றே நுழைந்து கேள்விக் கணைகளை தொடுப்பார்கள்.

சரியான விளக்கம் கொடுத்தாலும், அது குறை இது குறை என்று ஏதாவது ஒரு குறையை சொல்லி சொற்பொழிவாளர்களை சங்கடப்படுத்தி மகிழ்வார்கள்.

இதுபோன்று வாரியாரிடம் அதிகமாக வாய் கொடுத்து நிறைய பகுத்தறிவாளர்கள் செய்வதறியாமல் திகைத்து கூட் டத்தினர் மத்தியில் தலையில் துண்டை போட்டுக் கொண்டு சென்ற நிகழ்வுகள் அதிகம்.

அதுபோன்று ஒரு சமயம்...

வாரியார் சொற்பொழிவு நடந்து கொண் டிருந்தது. பெரிய கூட்டம். முன் வரிசையில் இருந்த நாத்தீகர் ஒருவர் எழுந்து "இந்து மதத்தில் மட்டும் ஏன் இத்தனை கடவுள்கள்?" என்ற வினாவினை எழுப்பினார்.

சொற்பொழிவை நிறுத்திய வாரியார் அவருடன் உரையாடத் துவங்கினார்.

"உங்களது பிரதான உணவு என்ன? அதாவது அரசியா, கோதுமையா?"

"அரிசி!"

"அரிசியில் என்னென்ன பாதார்தங்கள் செய்யலாம்?"

"சாதம், பொங்கல், இட்லி, தோசை, ஆப்பம், பனியா ரம், பிரியாணி, இன்னும் என்ன வெல்லா மோ செய்யலாம். ஏன் இதை கேட்கிறீர்கள்?"

"இல்லை அரிசியை ஊரவைத்து தின்றுவிட்டு போகலாமே, அதை யேன் மெனக்கெட்டு நேரத்தையும், பணத்தையும் செலவுசெய்து இத் தனை பதார்தங்கள் செய்ய வேண்டும்? அதற்காக கேட்டேன்"

"எப்படி சாமி வெறும் அரிசியை ஊரவைத்து திண்பது?. நாவிற் கென்று ருசி தேவைப்படுகிறதே"

"சாதாரண நாவிற்கே இத்தனை வகை ருசி தேவைப்படுகிறது, ஆனால் மூலப்பொருள் அரிசி ஒன்றுதான். அது போலத்தான் இறை வன் ஒருவனே இந்துக்கள் ஆன்மிக ருசிக்காக பல உருவங்களில் துதித்து வணங்கி மகிழ்கிறார்கள்."

கேள்வி கேட்ட நாத்தீகர் மேடையேறி வாரியாரை வணங்கி ஆசிர்வாதம் பெற்றுக் கொண்டார். அரங்கம் கரகோஷத்தால் அதிர்ந்தது.

# ஆன்மிகத் தகவல்களை

**எளிமையாக, பாமரர்களும் புரிந்து கொள்ளும் வகையில்**

**ஆன்மிகமலர்** மெயில் புத்தகத்தில் (e-book) வெளியிட்டு வருகிறோம்...

eBook DOWNLOAD free

இதுவரை வெளிவந்த

**170** க்கும் மேற்பட்ட இதழ்களை




## aanmeegamalar.com

இணையதளத்தில் இலவசமாக படிக்கலாம்.

# யானை வழிபாடு தோன்றிய வரலாறு

காணாபத்யம் எனும் விநாயகர் வழிபாடு ஓங்கி வளர்ந்த காலகட்டத்தில் கணபதியின் அம்சமாகவே போற்றப்பட்ட யானைகளும் பெரும் மதிப்பையும் வணக்கத்தையும் பெற்றன. பாற்கடலில் திருமகளோடு தோன்றிய திசை வேழங்கள் என்று போற்றப்படும் யானைகள், திருமகளின் உடன்பிறப்பாக கொண்டாடப்பட்டன. கஜலட்சுமி என்ற திருவுருவே திருமகளுக்கு உண்டானது.

முருகப்பெருமானின் வாகனங்களில்ஒன்றாக வும் யானை ஆனது. யானையின் தோலுரித்த ஈசன், கஜசம்ஹார மூர்த்தி என்ற வடிவம் கொண் டார். இப்படி யானைகள் எல்லாதெய்வங்களுடனும் இணைத்துப் பேசப்பட்டு பெரும்புகழ் கொண்டன. கோமாதா பூஜை முக்கியமானது போல கஜபூஜையும் விழாக்களில் முதன்மையானது.

புராணக் கதைகள் அதிகம் புகழ்பெற்ற ஆறாம், ஏழாம் நூற்றண்டுகளில்தான் யானைகள் கோயிலுக்குள் வந்தன என்று கூறப்படுகிறது.

பல்லவர்கள் காலத்தில் போர்க்களத்தில்காயம் அடைந்த யானைகள், அதன் புகழ் மற்றும் பராக்கிரமம் காரணமாக வெகு சிறப்பாக கவனித் துக்கொள்ள கோயிலில் ஒப்படைக்கப்பட்டன.

சரியான ஓய்வும், ஆரோக்கியமான உணவும் கொடுத்து அவை பராமரிக்கப்பட்டன. அதி லிருந்து சோழர்கள் காலத்தில் பெரும் கோயில் களுக்கு யானைகள் காணிக்கையாகக் கொடுப் பதும் வழக்கமானது.

பசுவின் பின்புறத்தில் மகாலட்சுமி வீற்றிருக் கிறாள் என்பதுபோல மகாலட்சுமி யானையின் முன் நெற்றியில் வீற்றிருப்பதாக நம்பப்படுகிறது. இதனால் யானைகள் இருக்கும் இடம் லட்சுமியின் வாசஸ்தலம் என்று கோயில்களில் அவை குடி புகுந்தன

விழா காலங்கள் போக, மற்ற நேரங்களில் யானைகள் பக்தர்களுக்கு ஆசி வழங்கவும், குழந்தைகள் மகிழ்ந்து அதன் மீது ஏறிக்கொள்ளவும் என ஒரு சந்தோச அடையாளமாக மாறிவிட்டன. அதுசரி, யானையிடம் மட்டும் மனிதர்கள் ஆசி வாங்க ஆசைப்படுவது ஏன்? அதனால் நன்மை ஏதும் உண்டா என்றால்... அது ஒரு மிகப்பெரிய ஆன்மிக ரகசியம் எனலாம்.


நாம் சுவாசிக்கும்போது ஒரு நேரத்தில் ஒரு மூக்கு துவாரத்தின் வழியேதான் சுவாசித்து காற்றை உள்ளே அனுப்புகிறோம். இப்படி 24 நிமிடங்களுக்கு ஒரு வலது இடது என நாசி துவாரங்களை மாற்றி மாற்றி பயன்படுத்துகிறோம். இதுவே பிங்கலை, இடங்கலை நாடிகள் என்கிறது ஆன்மிகம்.

ஆனால் பிராண யோகம், வாசி யோகம் கற்ற பெரியோர்கள் ஒரே நேரத்தில் இரு துவாரங்களிலும் சுவாசித்து யோக அனுபவம் பெறுவர். இது சுழுமுனை வாசி யோகம் என்று சொல்லப்படுகிறது.

இந்த யோகத்தை அடைந்தவர் ஞானியர். இதே விஷயத்தை யானைகள் அன்றாடம் எதேச் சையாக செய்கின்றன. சுழுமுனை வாசியால் வெளியாகும் அந்த மூச்சுக் காற்று நம் தலைமீது பட்டால் பல நன்மைகள் உள்ளன.

தலைக்கு மேலே நம்மைச் சுற்றியுள்ள சூட்சும சக்திக்கு அந்த மூச்சுக் காற்று அமைதியை அளிக்கும். அலைபாயும் குணத்தால் அவதிப் படுவோருக்கு இந்த யானை ஆசீர்வாதம் நன்மை அளிக்கும். அதிக கோபம், ரத்த அழுத்தம் கொண்டவர்களுக்கு இந்த சுழுமுனைக் காற்று நிவாரணம் அளிக்கும்.

இதனால்தான் யானையின் துதிக்கையில் ஆசி வாங்கும் பழக்கத்தை நம் முன்னோர் வழி வகுத்தனர்.



# சிதறிய சஞ்சீவி மலையின் சிதறல்கள் சென்னை அருகில் உருவான




# ஔஷதகிரி

சென்னை நகருக்கு மிக அருகில் இப்படி ஒரு புண்ணியத் தலத்தில் மிக உயர்ந்த மலைப் பகுதியில் ஸ்ரீநித்யகல்யாண பிரஸன்ன வேங்கடேச பெருமாள், தான் மட்டும் தனித்து வீற்றிருந்து அற்புதக் கோலத்தில் அருள் பாலிக்கிறார்.

பெருமாளின் திருத்தலம் அமைந்துள்ள மலை, 'ஔஷதகிரி' எனப்படுகிறது. இந்த மலைப் பிரதேசம் முழுக்க முழுக்க மூலிகைச் செடிகள் நிரம்பிக் காணப்படுகிறது. இதற்கு ஒரு காரணம் சொல்கிறார், இந்த ஆலயத்தில் பூஜைகள் செய்து வரும் பட்டாச்சார்யர். ''இந்திரஜித்துடன் நடந்த போரில் பாதிக்கப்பட்ட ஸ்ரீராமபிரான் மயக்க நிலைக்குத் தள்ளப்பட்டார். ஸ்ரீராமர் மயங்கிய நிலையில் பேச்சு மூச்சில்லாமல் இருப்பதைப் பார்த்த அவரின் பக்தனான அனுமன், கண் கலங்கினார். ஸ்ரீராமரது மயக்கத்தை உடனே தெளிவிப்பது எப்படி என்று யோசித்தார். அப்போது ஜாம்பவான் சொன்ன யோசனைப்படி சஞ்சீவி மலையில் இருந்து குறிப்பிட்ட சில மூலிகைகளைக் கொண்டு வந்து ஸ்ரீராமபிரானுக்கு சிகிச்சை அளித்தால், குணம் பெறுவார் என்று அறிந்தார். அதன்படி சஞ்சீவி மலை இருக்கும் வட திசை நோக்கிப் புயல் வேகத்தில் பறந்தார் அனுமன். சஞ்சீவி மலையை அடைந்தவர் ஸ்ரீராமபிரானை குணமாக்கும் மூலிகை எது என்று சரிவரத் தெரியாமல் குழம்பினார். எனவே, அந்த மலையை அப்படியே பெயர்த்து எடுத்துக் கொண்டு புறப்பட்டு வந்தார்.

சஞ்சீவி மலையைத் தூக்கிக் கொண்டு அனுமன் வரும்போது, அந்தப் பிரமாண்ட சஞ் சீவி மலையில் இருந்து சிறு சிறு பாகங்கள் ஆங்காங்கே பெயர்ந்து கீழே விழுந்தன. அதில் ஒரு சிறு பகுதிதான் இந்த ஔஷத கிரி. சஞ்

சீவி மலையின் ஒரு பகுதி என்பதால், இங்கு ஏராளமான மூலிகைச் செடிகள் மண்டிக் கிடக்கின்றன. மருத்துவ சிகிச்சைக்குத் தேவையான பல மூலிகைச் செடிகள் இங்கு இருப்பதால், இந்த மலையில் சற்று நேரம் அமர்ந்து, மூலிகைக் காற்றைச் சுவாசித்துச் செல்வதே பெரிய நிவாரணமாகக் கருதப்படுகிறது.

ஒற்றைத் தலைவலி, ஆஸ்துமா, சர்க்கரை வியாதி, எலும்பு முறிவு உட்பட பல பிரச்னைகளுக்கு நிவாரணம் அளிக்கும் மூலிகைகள் இந்த ஔஷத கிரியில் இருக்கின்றன. இந்தக் கோயிலுக்கு வரும் விஷயம் தெரிந்த பக்தர்கள், தரிசனம் முடிந்து செல்லும்போது சில மூலிகைகளையும் தங்களுடன் பறித்துச் செல்வது உண்டு.

எப்படி செல்வது?

செங்கல்பட்டில் இருந்து ஸ்ரீபெரும்புதூர் மற்றும் திருவள்ளூர் செல்லும் அனைத்துப் பேருந்துகளும் ஆப்பூர் வழியே செல்கின்றன.

செங்கல்பட்டில் இருந்து புறப்படும் இந்தப் பேருந்துகள் ஜி.எஸ்.டி. சாலையில் சிங்கப் பெருமாள்கோவில் வரை பயணித்து,அதன் பின் இடப்புறம் செல்லும் சாலையில் பயணிக்கும்.

சிங்கப்பெருமாள்கோவில் ரயில்வேஸ்டேஷன் லெவல் கிராஸிங்கைத் தாண்டி சுமார் ஆறு கி.மீ. பயணித்த பின், ‘ஆப்பூர் டாங்க் நிறுத்தம்’ என்ற இடத்தில் இறங்க வேண்டும். இங் கிருந்து, ஆலயத்தை அடைய சுமார் ஒரு கி.மீ. தொலைவு நடந்து செல்ல வேண்டும். சிங்கப்பெருமாள் கோவிலில் இருந்து ஆட்டோவிலும் வரலாம். தாம்பரத்தில் இருந்து படப்பை செல்லும் நெடுஞ் சாலையில் படப்பைக்கு அடுத்து வரும் ஒரகடம் கூட் ரோட்டில் இருந்து சுமார் 12 கி.மீ. தொலைவில் இந்த ஆப்பூர் கோயில் அமைந்துள்ளது.

மலைப் பாதை துவங்கும் இடத்தில் வண்டி களை வசதியாக நிறுத்திவிட்டுச் செல்ல முடியும். மலைக்கு மேலே வண்டிகள் செல்வதற்கு வசதி இல்லை. நடந்துதான் செல்ல வேண்டும். முதியவர்களும் மலை ஏறுவதற்கு வசதியாக படிகள் குறுகிய அளவில் இல்லாமல், விசாலமான அமைப்பில் கட்டப்பட்டிருப்பது சிறப்பான விஷயம் என்றுதான் சொல்ல வேண்டும். சுமார் 508 படிகள் கொண்ட இந்த மலையை இயல்பாக நடக்கும் சுபாவம் கொண்ட ஒருவர், அரை மணி நேரத்தில் இருந்து முக்கால் மணி நேரத்துக்குள்ளாக ஏறி விட முடியும்.

பிராகாரம் மற்றும் முன் மண்டபத்துடன் கூடிய கோயில். மண்டபத்தில் தசாவதாரக் காட்சிகள், அஷ்ட லட்சுமியின் வடிவங்கள் ஆகியவை சுதைச் சிற்பங்களாகக் காணப்படுகின்றன. பெருமாளைப் பார்த்தபடி கருடாழ்வார் காணப்படு கிறார். அகத்தியர் உள்ளிட்ட சித்தர்களும், வசிஷ்டர் உள் ளிட்ட ஏராளமான மகரிஷி களும் இந்த மலையில் தங்கி இருந்து, தவம் செய்து, பேறு பெற்றதாகச் சொல் கிறார்கள்.

பெருமாள் மட்டுமே இங்கு பிரதான தெய்வம். தாயார் உட்பட வேறு எந்த தெய்வங்களுக்கும் சந்நிதிகள் கிடையாது. எனவே, பெருமாளுக்குப் புடவை சார்த்தி வழிபடும் வழக்கம் இங்கு உள்ளது. ‘‘திருமணம் நிறைவேறாமல் இருப்பது, வேலையின்மை, கடன் சுமை போன்றவற்றால் அவதிப்படுபவர்கள் இந்த ஆலயத்துக்கு வந்து, பெருமாளுக்கு திருமஞ்சனம் சார்த்தி, புடவை


www.aanmeegamalar.com

அணிவித்து, ஐந்து முறை பிரதட்சணம் செய்து வழிபட்டால் குறைகள் போய் விடும். இது போன்ற மலை தங்கள் கனவில் வந்ததாகவும் பெருமாள் அழைத்தது கவும் சில பக்தர்கள் சொல்கிறார்கள். எப்படியோ, ஓரளவு பக்தர்கள் தற்போது வர ஆரம்பித்திருப்பது சந்தோஷமான விஷயம். புரட்டாசி சனிக் கிழமை, வைகுண்ட ஏகாதசி, ஆங்கிலப் புத்தாண்டு தினம், ஸ்ரீராமநவமி, மாத பௌர்ணமி போன்ற தினங்கள் இங்கு விமரிசையாகக் கொண்டாடப்படுகின்றன. ஸ்ரீதேவி பூதேவி சமேதராக உள்ள இந்த ஆலயத்துக்கான பெருமாள் உற்சவர் விக்கிரகம், ஆப்பூர் கிராமத்தில் ஒரு பஜனை கோயிலில் உள்ளது.


மாதம் தோறும் 2 புத்தகங்கள்
மலர்-3 இதழ்-68 ஜுன் 16-30 2019 இலவச புத்தகம் www.aanmeegamalar.com
ஆன்மிகமலர் டிரஸ்ட் வெளியீடு
e- magazine
ஆன்மிகமலர்
மெயில் புக்
மாதமிருமுறை
ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!
உலக வரலாற்றில் முதன்முறையாக இ-மெயிலில் வெளியிடப்படும் இதழ்
ஆன்மிகமலர் mobile app
Google Play
சிவ அதிர்வை தரும் வில்வ இலை பூஜை
சனிதோஷம், தீயசக்திகளை விரட்டும் மூத்ததேவி வழிபாடு
மழை வேண்டி இறைவனிடம் கூட்டு பிரார்த்தனை செய்யுங்கள்
முதல்வர் அறிவிப்பு: சென்னையில் கொட்டிய மழை
ஆன்மிக e-magazine
படியுங்கள் இலவசமாக
aanmeegamalar.com
ஆன்மிகமலர்.காம்

# தூங்கும்போது கனவில் இறைவன் தோன்றினால் என்ன பலன்கிடைக்கும்?

நம்முடைய ஆழ்மனதில் இருக்கும் எண்ணங்கள் தான் கனவாக வெளிப்படுகின்றன. சிலருடைய மனதில் நல்லதையே நினைத்து கொண்டிருக்கும் பட்சத்தில் அவர்களுக்கு நல்ல கனவு வருவதுண்டு. கெட்டது ஏதாவது நடந்துவிடுமோ என்று நினைத்துக் கொண்டிருக்கும் சிலருக்கு கெட்ட கனவு வருவது உண்டு.

நம்முடைய தேவையற்ற மற்ற சிந்தனைகளை எல்லாம் விட்டுவிட்டு, நல்லது நடந்தாலும், கெட்டது நடந்தாலும், இறைவனை மட்டும் அதிகமாக சிந்திப்பவர்களுக்கு அந்த இறைவன் அவர்களுடைய கனவில் காட்சி தருகின்றார்.

இப்படியாக நம் வாழ்க்கையில் நடக்கப்போகும் நல்லது கெட்டதை நமக்கு உணர்த்தும் வகையில்



www.aanmeegamalar.com

ஒவ்வொரு கனவிற்கும் ஒவ்வொரு அர்த்தம் உண்டு. பொதுவாக இரவு 1 மணிக்கு கனவு கண்டால் ஒரு வருடம் கழித்து அந்த கனவு பலிக்கும். இரவு இரண்டு மணிக்கு கனவு கண்டால் அந்த கனவு 3 மாதத்தில் பலிக்கும். அதிகாலை வேளையில் கனவு கண்டால் அந்த கனவு உடனே பலிக்கும் என்று சாஸ்திரத்தில் கூறப்பட்டுள்ளது.

முருகனை கனவில் கண்டால், நீங்கள் மனதில் நினைத்த காரியத்தில் நிச்சயமாக வெற்றி அடையப் போகிறீர்கள் என்பது அர்த்தம்.

சிவலிங்கத்தை கனவில் கண்டால் நீங்கள் தினமும் தியானம் செய்யும் பழக்கத்தை கொண்டு வர வேண்டும் என்பது அர்த்தமாகும்.

பிள்ளையார் கனவில் வந்தால் நீங்கள் மேற்கொள்ளப்படும் புதிய முயற்சிகள் வெற்றியடையும் என்பது அர்த்தம்.

அய்யனாரை கனவில் கண்டால் மன தைரியம் அதிகரிக்கும். விஷ்ணு பகவான் கனவில் வந்தால் நாம் செல்வந்தர்களாக போகிறோம் என்பது அர்த்தம். விஷ்ணு கருடன் மீது வருவது போல கனவு கண்டால் வழக்கில் உங்களுக்கு வெற்றி கிடைக்கும் என்பது அர்த்தம்.

உங்களது கனவில் கோவில் வந்தால் இறைவனின் ஆசி உங்களுக்கு நிறைந்திருக்கிறது என்பது அர்த்தமாகும்.

கோவிலுக்கு சென்று விட்டு இறைவனை காண முடியாமல் திரும்பி வருவது போல் கனவு வந்தால் உங்களுக்கு தீராத பிரச்சினை ஒன்று காத்திருக்கின்றது என்பது அர்த்தம்.

ஆலயத்தில் நீங்கள் மட்டும் தனியாக இருப்பது போல் கனவு கண்டால் உங்களது தொழிலில் எதிர்பாராத பிரச்சினை ஏற்பட போகிறது என்பது அர்த்தம்.

உங்கள் கைகளால் கோவில் வாசல் கதவுகளை திறந்து கொண்டு உள்ளே செல்வது போல கனவு கண்டால் புதிய தொழில் தொடங்கி வெற்றி அடையப் போகிறீர்கள் என்பது அர்த்தம்.

கோவிலில் பிரசாதம் வாங்குவது போல கனவு வந்தால் உங்களுக்கு நீண்ட நாட்களாக இருந்த மனக்கவலை தீர போகிறது என்பது அர்த்தம்.

கோவில் கோபுரங்கள் உங்களது கனவு வந்தால் பூர்வ ஜென்ம பாவங்கள் கூட நீங்கிவிட்டது என்பது அர்த்தம்.

அந்த இறைவன் உங்களிடம் பேசுவது போல கனவு கண்டால் இந்த ஜென்மம் புண்ணியத்தை அடைந்ததாக அர்த்தம்.

கோவில் இருக்கும் தெப்பக்குளத்தை கனவில் கண்டால் நீங்கள் தொட்டதெல்லாம் துலங்கும் என்பது அர்த்தம்.

ஏதாவது ஒரு கடவுளின் விக்ரகம் உங்களது கனவில் தோன்றினால் அந்த தெய்வத்தை நீங்கள் குடும்பத்தோடு சென்று வழிபட வேண்டியது அவசியமாகும்.

கோவில் மணி அறுந்து விழுவது போல கனவு கண்டால், கோவிலுக்கு செல்லும் போது தடங்கள் ஏற்படுவது போல கனவு கண்டால் உங்களுக்கு ஏதோ ஒரு இடையூறு ஏற்பட போகிறது என்பதை குறிக்கும்.

நவகிரகங்களை கனவில்கண்டால் 9 வாரம், நவகிரக கோவிலுக்கு சென்று 9 முறை வலம் வருவது நன்மை தரும்.




யானை உங்களை துரத்துவது போல கனவு கண்டால் விநாயகருக்கு ஏதோ ஒரு குறையை நீங்கள் வைத்திருக்கிறீர்கள் என்பது அர்த்தம்.

யானை உங்களை ஆசீர்வாதம் செய்வது போல கனவு கண்டால் உங்களுக்கு பதவி உயர்வு கிடைக்கப் போவது என்பது அர்த்தம்.

அம்பாளை கனவில் கண்டால் உங்களது வீட்டில் மங்களகரமான நிகழ்ச்சி நடைபெறப் போகிறது என்பதை குறிக்கும்.

உங்களது கனவில் வேறு எந்த தெய்வங்கள் வந்தாலும் அது நல்ல சகுணங்கள்தான் என்று சாஸ்திரத்தில் கூறப்பட்டுள்ளது.

ஆன்மிகமலர் மெயில் புக்

# இதுவரை வெளிவந்த அனைத்து இதழ்களையும் எந்தவித கட்டணமின்றி முற்றிலும் இலவசமாக படிக்க












## aanmeegamalar.com

## இணையதளத்தை

## பார்க்கவும்









# குபேரன் வீட்டில் குடிகொள்ள வேண்டுமா? இந்த வழிமுறை கண்டிப்பாக உதவும்!



www.aanmeegamalar.com

எப்போதும் நம் வீட்டில் செல்வம் நிலைத்திருக்கவும், நமது வீட்டிற்கு எப்போதும் செல்வத்தை ஈர்க்கும் சக்தி கிடைப்பதற்கும், நாம் முழு மனதுடன் செய்ய வேண்டிய ஒரு விசேஷ விளக்கு பூஜை உள்ளது.

செல்வம் பல மடங்காக பெருகுவதற்கு எளிமையான பரிகாரங்கள் உள்ளன.

சம்பாதிப்பதில் ஒரு தொகையை சேர்த்து அதனைஅன்னதானத்திற்கு செலவிட அதனை போல் ஐந்து மடங்கு நம்மிடம் வந்து சேரும். கோவிலில் லஷ்மி மீது வைத்த தாமரை மலரைக்கொண்டு வந்து பச்சை பட்டுத் துணியில் வைத்து மடித்து பணப்பெட்டியில் வைக்க பணம் சேரும்.

செல்வத்திற்கு உரியவள் மகாலட்சுமி வெள்ளிக்கிழமைதினம் வழிபடவும் 24 வெள்ளிக்கிழமை வழிபாட்டால்பணம் கிடைக்கும். குபேரனை வழிபட பணம் தடையின்றிகிடைக்கும்.

செல்வச்செழிப்பான கடவுள் குபேர கடவுள். அவர் மற்ற கடவுள்களின் செல்வங்களை எல்லாம் பாதுகாத்து இரட்டிப்பாக பெருக்கி கொடுப்பார்.

குபேர கடவுளிடம் மட்டுமே செல்வம் குறையாது பெருகிக் கொண்டே இருக்கும்.

இவ்வாறு நம்மிடமும் செல்வம் பெருகிக் கொண்டே இருக்க வும் நம்மிடம் இருக்கும் செல்வத்தை குபேர கடவுள் பாதுகாத்து அதனை பல மடங்காக பெருகி கொடுக்கவும் நாம் குபேரருக்கு செய்ய வேண்டிய ஒரு உகந்த வழிபாடுதான் லஷ்மி குபேர விளக்கு பூஜை வழிபாடு. வியாழன், வெள்ளிக்கிழமைகளில்

இந்த விளக்கினை ஏற்றி வழிபடலாம்.

## குபேர விளக்கு

செல்வத்தின் அதிபதியாக குபேரர் விளங்குகிறார். அவரை நாம் வணங்கி வர அவரின் அருள் கிடைத்து வாழ்வில் வளம் பெறலாம்.

அவரின் அருள் பெற குபேரர் விளக்கில் தீபம் ஏற்றி வழிபடலாம். குபேரவிளக்கை ஏற்ற சரியான தினமாக வியாழக் கிழமை பார்க்கப்படுகின்றது.

அன்று மாலை 5 மணி முதல் இரவு 8 மணிக்குள் இந்த குபேர விளக்கை ஏற்றி பூஜை செய்வதுஉகந்தது.




## விளக்கு ஏற்றும் நேரம்

குபேரருக்கு உகந்த நாளான வியாழக்கிழமை அன்று இந்த விளக்குப் பூஜையை நாம் செய்ய வேண்டும். இந்த விளக்கை ஏற்ற நாம் குபேர விளக்கை பயன்படுத்த வேண்டும். குபேர விளக்கு பூஜை பாத்திரங்கள் விற்கும் கடைகளிலும் அல்லது கோவில்களிலும் கிடைக்கும். உங்களுக்கு குபேர விளக்கு கிடைக்கவில்லை என்றாலும் அகல் விளக்கில் விளக்கை ஏற்றி இந்த பூஜையை பின்பற்றலாம். ஒவ்வொரு வியாழக்கிழமையும் மாலை 5 லிருந்து 8 மணிக்குள் இந்த விளக்கை ஏற்றினால் அது மிகவும் விசேஷம்.

## 5 ரூபாய் நாணயம்

முதலில் குபேர விளக்கிற்கும் குபேர விளக்கு வைக்கும் மனை அல்லது தட்டிற்க்கு ஒற்றைப்படையில் மஞ்சள் குங்கும பொட்டு வைக்க வேண்டும். பிறகு குபேர விளக்கு வைக்கும் தட்டில் சிறிதளவு பச்சரிசியை வைக்கவேண்டும். பச்சரிசி மகாலக்ஷ்மியின் அம்சம் என்பது குறிப்பிடத்தக்கது. குபேரருக்கு விசேஷமான எண் 5. எனவே ஐந்து ரூபாய் நாணயத்தை பச்சரிசியில் வைக்க வேண்டும்.

## சுத்தம் செல்வம் தரும்

குபேரருக்கு விருப்பமான வியாழக்கிழமை தினத்தில் காலையில் வீட்டை சுத்தம் செய்ய வேண்டும். அன்று மாலை வீட்டின் வாசலில் செம்மண் பட்டை இட்டு அலங்காரம் செய்ய வேண்டும்.

அதன் மீது பச்சரிசி மாவில் கோலம் போட வேண்டும். வாசல் நிலைப்படிக்கு சந்தனம் தெளித்து, மஞ்சள் குங்குமம் வைக்க வேண்டும்.

அதன் பின்னர் கரும்புள்ளி இல்லாத ஒரு எலுமிச்சைப் பழத்தை எடுத்து, அதை இரண்டாகாக வெட்டவும். ஒருதுண்டில் மஞ்சள், மற்றொரு துண்டில் குங்குமம் தடவி, நிலைப்படிக்கு இருபுறமும் ஒவ்வொன்றை வைக்கவும். அதன் பின் நிலைப்படியின் இருபக்கமும் மலர்களை வைக்கவும்.

## குபேர விளக்கு ஏற்றும் முறை

விளக்கு ஏற்றும் போது வீட்டினுள், வாசலின் முன் நின்றபடி, நமது இடது புறத்தில், ஒரு மரப்பலகை அல்லது தட்டி நன்றாக சுத்தம் செய்த குபேர விளக்கை வைக்கவும்.

அதற்கு மஞ்சள் குங்குமம் வைக்கவும். அதில் நல்லெண்ணெய் ஊற்றி, இரண்டு திரிகளை எடுத்து, ஒன்றாக சேர்த்து ஒரு திரியாக்கி குபேர விளக்கில் போடவும்.

பின்னர் வீட்டில் எப்போதும் வீட்டில் விளக்கேற்றும் பூஜை அறையில் விளக்கேற்றிய உடன், குபேர விளக்கிலும் தீபத்தை ஏற்ற வேண்டும்.

## குபேரன் காயத்ரி மந்திரம்

குபேர தீபத்தை குபேரன் காயத்ரி மந்திரம் சொல்லிக் கொண்டே ஏற்றலாம்.

ஓம் யக்ஷராஜாய வித்மஹே
வைஸ்ரவ ணாய தீமஹி!
தந்நோ குபேர ப்ரசோதயாத்

இப்படி செய்வதால் நமக்கு குபேரரின் அருள் கிடைத்து குடும்பத்தில் அனைத்து செல்வங்களும் கிடைக்கும் என்பது ஐதீகம்.

குபேர விளக்கை தினமும் பூஜை அறையில் ஏற்றி வரலாம். குபேரருக்கு உகந்த திசை வடக்கு. ஆகையால் பூஜை அறையில் வடக்கு திசை நோக்கி ஏற்றவேண்டும்

## நெய் தீபம்

குபேர விளக்கில் நெய் அல்லது நல்லெண்ணெய் சேர்த்து குபேர திரியினால் அதாவது குபேரருக்கு உகந்த நிறம் பச்சை. அதனால் பச்சை நிறத்தில் உள்ள திரியால் குபேர விளக்கு ஏற்றினால் மிகவும் சிறந்த பயனளிக்கும்.

பச்சை நிற தரி இல்லை எனில் பஞ்சு திரி வைத்தும் விளக்கு ஏற்றலாம். குபேர விளக்கில் ஐந்து கற்கண்டு சேர்க்கவேண்டும்.

கற்கண்டு சேர்ப்பதனால் பணவரவு அதிகரிக்கும். விளக்கைச் சுற்றி வாசனை மலர்கள் வைக்க வேண்டும்.

குபேர விளக்கை ஏற்றிய பின்னர் நம் வீட்டின் நிலை வாசலில் இடதுபுறம் வடக்கு நோக்கி வைக்க வேண்டும்.

## நிலைவாசலில் தீபம்

குபேர விளக்கை நிலை வாசலில் ஏற்ற வேண்டுமென்றால் குபேரர் மற்ற கடவுளின் செல்வங்களுக்கு எல்லாம் பாதுகாவலர். அவரை வாசலில் வைத்து பூஜித்தால் நமது செல்வத்திற்கும் பாதுகாவலாக இருப்பார்.

விளக்கை ஏற்றும்போது குபேர மந்திரத்தை மனதில் உச்சரித்துக் கொண்டு ஏற்றினால் மிகவும் நல்லது "ஸ்ரீமகாலஷ்மி குபேராய நமஹ" எனும் குபேர மந்திரத்தை மனதில் பக்தியுடன் உச்சரித்து கொண்டே இந்த விளக்கை ஏற்றி வர உங்கள் குடும்பத்தில் பண வரவு செழிப்புடன் வந்து கொண்டிருக்கும்.

ஒவ்வொரு வியாழக்கிழமையும் மாலை 5 லிருந்து 8 மணிக்குள் உங்கள் வீட்டு நிலை வாசற் படியில் இவ்வாறு வடதிசை நோக்கி குபேர விளக்கு ஏற்றி வர உங்கள் வீட்டில் எப்போதும் செல்வம் குறையாமல் பெருகிக் கொண்டே இருக்கும்.

தொடர்ந்து குபேர விளக்கை ஏற்றி வழிபட்டு வர குடும்பத்தில் இருந்த துன்பங்கள், கடன் பிரச்சினை, சங்கடங்கள் அனைத்தும் நீங்கி நல் வாழ்வு கிடைக்கும்.


அழகிய வடிவமைப்பில்
வார இதழ்கள்,
மாத இதழ்கள்,
பப்ளிகேஷன்ஸ்
புக் ஓர்க்,
அட்டைப்பட
வடிவமைப்பு,
நாளிதழ்கள்,
போன்றவை
தரமாகவும்
குறைந்த செலவில்
செய்துதரப்படும்
SML Graphics
Sree Maha Laksmi Graphics
செல்: +91-9444228203

# கட்டாய சந்தா இல்லை!

# சப்ஸ்கிரைப் இல்லை!!

# மாற்று மத திணிப்பு இல்லை!!!

தரம் மட்டுமே
நமது இதழின் தாரகமந்திரம்,
வியாபார நோக்கத்துடன் செயல்படும்
மற்ற ஆன்மிக இதழுக்கிடையே
சேவையை மட்டுமே நோக்கமாக
கொண்ட ஒரே தரமான
ஆன்மிக இதழ்

## ஆன்மிகமலர்.காம் வழங்கும்
## ஆன்மிகமலர் மெயில் புத்தகம்

ஒரே கிளிக் **170** இதழ்களையும்

டவுன்லோடு செய்து படியுங்கள்

மேலும் விபரங்களுக்கு

aanmeegamalar.com இணையதளத்தை பாருங்கள்

# சூரிய வம்சத்தினரான அடையாளப்படுத்திக் கொண்ட எகிப்தியர்



சூரியனை தனிப்பெரும் தெய்வமாக கொண்டாடுகின்ற சௌர மதம் ஆறாம் நூற்றாண்டு வரையிலும்கூட இந்தியா முழுவதும் பல்வேறு தரமக்களால் தனி சம்பிரதாயமாக கடைபிடிக்க பட்டது. அதன் பிறகு இந்து மதத்தில் ஏற்பட்ட பெரும் விழிப்புணர்ச்சி காரணமாக சௌரம் தனிபாதையை விட்டு இந்து மதம் என்ற மகா சமூத்திரத்திற்குள் கலந்து விட்டது.

இந்தியாவில் மட்டுமல்ல ஏசுநாதர் பிறப்பதற்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே சூரிய வழிபாடு எகிப்து நாட்டில் மிக உத்வேகத்தோடு கடைபிடிக்க பட்டு மன்னரும் மக்களும் அதன் வழியில் வாழ்ந்ததற்கான ஆதாரங்கள் நிறைய கிடைக்கின்றன.

எகிப்து நாட்டின் புகழ்பெற்ற அரச பரம்பரையான பாரோ மன்னர்கள் தங்களைசூரிய வம்சத்தார் என்றுபெருமையோடு அழைத்து கொண்டார்கள். நமது நாட்டில் எப்படி பயிர் தொழிலில் பலன் கிடைத்தவுடன் சூரியனுக்கு நன்றி தெரிவித்து பொங்கல் விழா கொண்டாடுகிறோமோ அதே போலவே எகிப்து நாட்டிலும் உழவர்கள் தங்களது அறுவடை காலத்தை சூரியனுக்கு நன்றி தெரிவிக்கும் காலமாக கொண்டாடி இருக்கிறார்கள்.

இன்றைய ஈரான் என்கின்ற பழைய பாராசிகம் சூரியனை படைக்கும் கடவுளாகவும் காக்கும் கடவுளாகவும் வழிபட்டு இருக்கிறது. பாரசீக மக்களின் அப்போதைய புனித நூலான அவஷ்தானத்தில் மித்திரன் என்ற பெயர் முழுமுதற் கடவுளுக்கு கொடுக்கப்பட்ட பல பெயர்களில் ஒன்றாக இருக்கிறது. மித்திரன் என்பது சூரியனின் பல பெயர்களில் ஒன்று என்பது குறிப்பிட தக்கது.



கிரேக்க மக்கள் சூரிய கடவுளுக்கு அபொல்லோ என்ற பெயர் கொடுத்து வணங்கினார்கள். ரோமாபுரியில் சூரியனுக்கு தைபீரியஸ் என்பது பெயராகும். வடஅமெரிக்காவில் உள்ள மெக்சிகோவிலும் சூரிய வழிபாட்டு கூடங்கள் இருந்ததற்கான மிக பழைய சின்னங்கள் இன்றும் இருக்கின்றன. இதை போலவே தென்னமெரிக்காவிலும் இன்காஸ் என்ற மக்கள் இனம் சூரியனை கடவுளாக வழிபாடு செய்திருக்கிறார்கள். அதற்க்கான ஆதாரங்களும் இன்றும் அழியாமல் இருக்கின்றன.

இந்தியாவில் புராதான காலத்தில் கிருஷ்ண பரமாத்மாவின் குமாரன் சாம்பன் தனக்கு ஏற்பட்ட சாப விமோசனத்திற்கு நாரத மகரிஷியின் அறிவுரை படி சூரிய வழிபாட்டை செய்ததாகவும் அதற்காக அவன் சூரியனுக்கு தனிக்கோவில் கட்டியதாகவும் சில புராணங்கள் தகல்வல்களை தருகின்றன. அப்போது இந்தியாவில் சூரிய வழிபாட்டை தனி வழிபாடாக கடைபிடிக்கும் மக்கள் அதிகமாக இல்லாததால் சூரியனுக்கு வணக்கம் செலுத்த பாராசீக நாட்டிலிருந்து ஐரானியர்களை அழைத்து வந்ததாகவும் தகவல்கள் உள்ளன.

ஐரானிய மக்கள் வழிபாட்டின் போது இடுப்பில் அணிந்து கொள்ளும் ஒரு புனித ஆபரணத்தை சூரியனுக்காக சாம்பன் செய்ததாகவும் அதையே சூரிய கோவிலில் உள்ள மூல விக்ரகத்திற்கு அணிவித்ததாகவும் சூரிய புராணம் தெளிவாக சொல்கிறது. சூரிய புராணத்தில் கூறப்பட்டுள்ள கருத்துக்களை ஆழமாக பார்க்கும் போது இந்தியாவில் சூரிய நமஸ்காரம் என்பது தொன்றுதொட்டு இருந்தாலும் அது தனி தெய்வ வழிபாடாக பரிணாம் எடுத்தது கிருஷ்ணனின் குமாரன் சாம்பன் காலத்திலேயே தான் என்று தெரிகிறது.

எகிப்து நாட்டு பாரோ மன்னர்கள் போலவே இந்திய மன்னர்களும் சூரிய தேவனை உபாசனை செய்வதிலும் தங்களை சூரிய புத்திரர்கள் சூரிய வம்சத்தார்கள் என்று சொல்லி கொள்வதிலும் பெருமை பாட்டார்கள். மகாபாரதத்தில் தர்ம புத்திரர் வனவாசம் மேற்கொண்ட போது தங்களை நாடிவரும் முனிவர்களுக்கும் மற்றவர்களுக்கும் இல்லை என்று சொல்லாமல் உணவளிப்பதற்கு சூரியனை வழிபட்டே அச்சைய பாத்திரம் பெற்றார் என்பதை இங்கு குறிப்பிட வேண்டும். குந்தி தேவியின் மூத்த மகன் சூரிய புத்திரன் என்பதும் அவன் மிக சிறந்த சூரிய பக்தன் என்பதும் மாமன்னன் கர்ணனை அறிந்தவர்கள் அனைவரும் அறிவார்கள்.

தமிழகத்தில் புகழ்பெற்ற சோழர் குலத்தில் வந்த பராந்தக சோழன் குடந்தை நாகேஸ்வரர் ஆலயத்தில் உள்ள சூரிய பகவானுக்கு மானியம் அளித்த சாசனமும் செம்பை கிராமத்தில் சூரியனுக்காக ஸ்ரீ கண்டராதித்ய க்ரஹம் என்ற தனிகோவிலை எழுப்பியதும் வரலாற்று பதிவாகும் மேலும் குலோத்துங்க சோழன் சூரியன் மீதுகொண்ட அளவற்ற பக்தியால் சூரியநாராயண ஆலயம் எழுப்பதியும் அதற்கு முறைப்படி ஆராதனை நடப்பதற்கு மானியம் எழுதி வைத்ததும் குறிப்பிட தக்கதாகும்.

வேத காலம் தொட்டே சூரிய வழிபாடு இருந்து வந்தது என்றாலும் சூரியபகவானுக்கு என்று தனி ஆலயங்கள் எழும்பியது மிகவும் பிற்காலத்தில் தான் கோனார்க்கில் உள்ள சூரிய ஆலயம் பதிமூன்றாம் நூற்றாண்டில் கீழை கங்க வம்சத்து மன்னான முதாலம் நரசிம்மனால் கட்டப்பட்டதாகும். இந்த ஆலயத் தை சுற்றி கண்ணை கவரும் பல சிற்பங்கள் இருந்தாலும் சூரிய நாராயணனை குறிக்கும் ஒரு சிற்பம்






மிகசிறந்த கலைநயத்தோடு காட்சி தருகின்றது இதில் சூரிய நாராயணர் தாமரை மலர் மீது கம்பீரமாக நிற்கிறார். மலருக்கு அடியில் பக்தர்கள் மண்டியிட்டு வணங்கு கிறார்கள்.

குஜராத் மாநிலத்தின் பழைய கால தலைநகரம் பட்டான் என்ற ஊராகும். இந்த ஊருக்கு பதினெட்டு மயிலுக்கு தெற்கே மோதேரா என்ற ஊர் அமைந்துள்ளது இந்த ஊரில் மிக பழைய காலத்து சூரிய கோவில் ஒன்று சிதிலம் அடைந்த நிலையில் காணப்படுகிறது. இந்த ஆலயம் ஷோலங்கி வம்சத்து மன்னர்களால் கட்டப்பட்டதாகும். இந்த ஆலயத்தில் கலை எழில் கொஞ்சும் ஒரு சூரிய சிற்பம் இருந்ததாகவும் அது அரபு மன்னர்களின் படையெடுப்பின் போது களவாடப்பட்டு போனதாகவும் தெரிகிறது.

காஷ்மீரத்தில் மார்தாண்ட் என்ற இடத்தில் ஒன்பதாம் நூற்றாண்டை சேர்ந்த ஒரு சூரிய கோவிலும் ராஜஸ்தானில் உள்ள ஜெய்பூரிலும் மேற்கு வங்காளத்திலும் சூரியனுக்கு என்று பல தனிகோவில்கள் பல மன்னர்களால் கட்டப்பட்டுள்ளது நமது தமிழகத்தை பொறுத்தவரை தஞ்சை மாவட்டத்தில் உள்ள திருமங்கல குடியில் அமைந்துள்ள முதலாம் குலோத்துங்க சோழன் கட்டிய சூரிய ஆலயம் மிகவும் புகழ் பெற்றதாகும்.

சூரிய அலையங்கள் பற்றிய விவரங்களை இங்கு நான் தருவதற்கு மிக முக்கிய காரணமுண்டு ஒரு வழிபாட்டை பலர் செய்யாமல் சிலபேர் மட்டுமே செய்தார்கள் என்றால் அவர்கள் தங்களது வணக்க முறைகளை வீட்டுக்குள்ளையே வைத்து கொள்வார்கள். வெளியிடத்தில் அதை பெரிது படுத்தி காட்ட மாட்டார்கள் கோபுரம் கட்டி மண்டபம் நிர்மாணித்து அபிசேக ஆராதனையோடு வழிபாடு நிகழ்த்துகிறார்கள் என்றால் அந்த சம்பிராதயத்தை கடைபிடிக்கும் மக்களின் எண்ணிக்கை மிக அதிகம் என்று அர்த்தமாகும்.


யோகி
ஸ்ரீ ராமானந்த குரு


அதே போலவே திருமாலை வழிபடும் மக்கள் எப்படி அதிகமோ சிவனை கொண்டாடு பவர்களின் எண்ணிக்கை எப்படி அதிகமோ ஆதி பராசக்தியை சக்தி குமாரனை கணபதி யை வழிபடுபவர்களின் எண்ணிக்கைஎப்படி அதிகமோ அப்படியே சூரியனை வழிபடுவர்களின் தொகையும் அதிகமாகவே இருந்திருக்கிறது. நாளாவட்டத்தில் சௌரம் மத பிரிவை தூக்கி நிறுத்த சரியான குரு மார்கள் இல்லாத காரணத்தினாலே சௌரம் இந்து மதம் என்ற சமுத்திரத்தில் கரைந்து விட்டது. ஆனாலும் தனித்தன்மை என்றும் மாறாது. சூரிய பக்தர்கள் இன்றும் பலர் இருக்கிறார்கள். இனியும் இருப் பார்கள்.

யோகி ஸ்ரீ ராமானந்த குரு
போன்: 09442426434

# மலைத் தொடராக உருவான ஆதிஷேன் வயிற்றுபகுதியாக விளங்கும்

# அஹோபிலம்






1,000 – 3,000 – 5,000 ஆண்டுகள் கடந்த கோவில்களை பார்ப்பது என்பது மனதிற்கு ஒரு தனி சுகம் தான்.

அதிலும் யுகங்கள் கடந்து இன்றும் கம்பீரமாக காட்சியளிக்கும் கோவில் என்றால் இன்னும் மகிழ்ச்சி பெருகத்தான் செய்யும்.

பொதுவாக நாம் எதோ ஒரு கோவில் செல்ல வேண்டும் என்றால் என்ன செய் வோம்?, அந்த கோவில் எங்கு உள்ளது, என்ன சிறப்பு அங் குள்ள இறை மூர்த்திக்கு, என்ன தல வரலாறு என்று தெரிந்து கொண்டு செல்வோம்.

அல்லது அந்த கோவில்களில் ஏதாவது பரிகாரம் செய்ய செல்வோம்.இது இயல்பு. ஆனால் ஒரே ஒரு தனிப்பட்ட கோவில் செல்ல வேண்டும் என்றால் அதற்க்கு முன்பாக நாம் சில மரபுகளை,சில இறை வழிபாடுகளை செய்து விட்டுச் சென்றால் தான் நாம் செல்ல விருக்கின்ற அந்த கோவிலில் உள்ள இறை அருள் மிக பரிபூரணமாக கிடைக்கும் என்றால் அந்த கோவிலின் சிறப்பை பற்றி என்ன சொல்ல.

ஆம் அப்படியாக யுகங்கள் கடந்து இன்றும் நமக்காக ஸ்ரீ நரசிம்மர் ரூபம் கொண்டு காட்சி தரும் திருச்சிங்கவேள் குன்றம் என்கின்ற அஹோபிலம் தான் அந்த புனித ஸ்தலம்.

பகவான் ஸ்ரீ நரசிம்மர் அவதாரம் எடுத்த திருத்தலம். தனது பக்தன் பிரகலாதனுக்காக எம்பெருமான் நாராயணர் எடுத்த அவதாரம் தான் ஸ்ரீ நரசிம்மர் அவதாரம். எம்பெருமான் அவதார காலங்களில் மிக குறைந்த அளவு நாளிகைகள் மட்டுமே கொண்ட அவதாரம். அதி அற்புத அவதாரம்.

ஒருபுறம் கொடூர உருவம் கொண்டு இரன்னியனை வதம் செய்த அதே உருவம் தான் தனது தூய பக்தன் பிரகலாதனை அணைத்து அரவணைத்துக் கொண்டது.

சரி இனி இந்த புண்ணிய பூமிக்கு எப்படி செல்ல வேண்டும் என்றும் எவ்வாறு சென்றால்

கருடன் தவம் செய்த மலை என்பதால் இம்மலைக்கு இன்றும் கருடாசலம் என்ற பெயர் உண்டு. பிற தெய்வங்களும், தேவர் களும், ரிஷிகளும், சித்தர்களும் மட்டமே சென்று வழி பட்டு வந்த திருத்தலம் இன்று நம்மைப் போன்ற சாதாரண மனிதர்களும் தரிசனம் செய்யும் வகையில் மாற்றம் பெற்று உள்ளது.

சரி இனி இந்த அஹோபில மலை பயணத்தை தொடங்குவோம்.மனதையும்,உடலையும் தயார் படுத்திக்கொண்டு இந்த புண்ணிய பயணத்தை தொடங்கிநோம்.இரண்டு நாள் பயணம்.

பயணத்தை தொடங்கும் முன்பு என்னென இடங்கள் இந்த புனித பூமியில் இருக்கின்றது என்பதை பாப்போம்.

அஹோபிலம் இரண்டு ஸ்தலங்களாக அமைத்து உள்ளது, அவை

1. கீழ் அஹோபிலம்,
2. மேல் அஹோபிலம்.

## 1.கீழ் அஹோபிலம்

கீழ் அஹோபிலம் என்பது மலை அடிவாரம். இங்குதான் அஹோபில மடம், உணவு விடுதி கள், தங்குவதற்கு வாடகை ரூம்கள், கடைகள் உள்ளது. கீழ் அஹோபிலதில் தான் பிரகலாத வரதர் கோவில் உள்ளது. இந்த கோவில் நவ நரசிம்மர்களில் வராது.

இந்த பிரகலாத வரதர் கோவில் உள்ள இடம் தான் கீழ் அஹொபிலத்தின் மையப்பகுதி. கீழ் அஹோபிலத்தில் உள்ள இடங்கள்

1. பிரகலாத வரதர் கோவில் (கீழ் அஹோபில நரசிம்மர் கோவில்)
2. பார்கவ நரசிம்மர்(ஆறாவது நரசிம்மர் கீழ் அஹோபிலத்தில் இருந்து சுமார் இரண்டு கிலோமீட்டர் தூரம்)
3. சத்ரவட நரசிம்மர்(எட்டாவது நரசிம்மர் கீழ் அஹோபிலத்தில் இருந்து சுமார் மூன்று கிலோமீட்டர் தூரம்)
4. யோகானந்த நரசிம்மர்(எழாவது நரசிம்மர் எட்டாவது நரசிம்மர் கீழ் அஹோபிலத்தில் இருந்து சுமார் மூன்று கிலோமீட்டர் தூரம்)
5. பாவன நரசிம்மர்(ஒன்பதாவது நரசிம்மர் கீழ் அஹோபிலத்தில் இருந்து சுமார் இருபது கிலோமீட்டர் தூரம் செல்ல வேண்டும். ஜீப்பில் தான் செல்ல முடியும்.மேல் அஹோ பிலத்தில் இருந்தும் செல்லலாம் நடை பயணமாக சுமார் 7 கிலோமீட்டர் தூரம் காட்டு பயணம்)

## 2.மேல் அஹோபிலம்

மேல் அஹோபிலம் என்பது தான் கருடாத்திரி மலை என்று அழைக்கபடுகின்றது. மேல் அஹோபில மலையில் தான் இரன்னியனை வதம் செய்ய தூணைப் பிளந்து எம்பெருமான் நரசிம்மர் உருவம் கொண்டு வெளிவந்தார். அந்த சக்தி உகத்தில் இருத்த இரன்னியனின் அரண்மனையையும், பெருமான் வெளி வந்த தூணையும் இன்றும் காணலாம். அந்த தூண் இந்த கலியுகத்தில் உக்கரஸ்தம்பம் என்ற பெயர் கொண்டு விண்ணை முட்டி நிற்கின்றது. அத்துணை பிரம்மாண்டம்.




இந்ததூணின் அடியில் உள்ள குகையில்தான் ஜ்வால நரசிம்மராக ஆக்ரோஷம் கொண்டு இரண்யனை வதம் செய்யும் நிலையில் உள்ளார் எம்பெருமான்.

மேல் அஹோபில மலையில் உள்ள இடங் களைப் பற்றி பார்ப்போம். கீழ் அஹோபிலத்தில் இருந்து சுமார் 10 கிலோமீட்டர் மலைப்பயணம். அணைத்து வாகனகளிலும் செல்லலாம். மலை ஏறும் போதே அந்துனை அமைதி, ரம்மியம்.

1. கரஞ்ச நரசிம்மர் (மேல் அஹோபிலம் செல் லும் போது ரோட்டின் வலது புறம் உள்ளது)
2. அஹோபில நரசிம்மர்(மேல் அஹோபிலக் கோவில் மிக பழமையான கோவில்)
3. வரஹா நரசிம்மர்
4. ஜ்வாலா நரசிம்மர் (குகைக் கோவில் உக்கர ஸ்தம்பம் என்ற தூணின் அடியில் உள்ளது நரசிம்மர் இரன்னியனை வதம் செய்தஇடம்). இதன் அருகிலே ரத்தகுண்டம் என்ற ஊற்று உள்ளது. இரன்னியன் வதம் முடிந்த பின்பு எம்பெருமான் நரசிம்மர் தனது திருக்கரங் களை கழுவிய இடம்.இன்றும் சிவப்பாக உள்ளது ஆச்சர்யம்.
5. மாலோல நரசிம்மர்
6. பிரகலாத மெட்டு அல்லது பிரகலாத மேடு (பக்த பிரகலாதன் வேதம் படித்த குருகுலம். இன்றும் பிரகலாதன் திருக்கரத்தால்"ஓம் நமோ நாராயணா" என்று எழுதிய எழுத்துக் கள் இந்த குருகுல பாறைகளின் மீது உள் ளது வியப்பின் உச்சம்.

# ஆன்மீக வழியில் அமைதி




சூக்ம பஞ்சபூதங்களில் ஒவ்வொரு பூதத்திலும் உள்ள தமோ குணம் அம்சத்திலிருந்து வருவது நாம் அனுபவவிக்கிற ஸ்தூல சரீரங்கள் தோன்றின என சாஸ்திரம் கூறுகிறது. அதாவது சூக்ம பஞ்சபூதங்களில் ஒன்றான ஆகாச தத்துவத்துடன் தமோ குணம் சேர்ந்து நாம் காணும் ஸ்தூல சரீரங்கள் தோன்றின. எடுத்துக்காட்டாக ஐந்து பணியாளர்கள் ஓரிடத்தில் கூடி இருக்கிறார்கள் என்று வைத்துக்கொள்வோம். அவர்கள் லெமன் சாதம், தயிர் சாதம், தக்காளி சாதம், புளிச்சாதம், தேங்காய் சாதம் என விதவிதமான சாதங்கள் கொண்டு வருகிறார்கள்.

அவர்கள் ஓரிடத்தில் அமர்ந்து தாங்கள் கொண்டு வந்துள்ள சாதத்தில் பாதி அளவு (50%) தங்களுக்கு வைத்துக்கொண்டு, மீதியுள்ள பாதி அளவு சாதத்தை (50%) ஐ நான்கு பணியாளர்களும் பகிர்ந்து கொள்கிறார்கள். அவ்வாறு ஐந்து பணியாளர்களும் ஒவ்வொரு பணியாளரிடமும் ஐம்பது சதவீதம் பகிர்ந்துகொண்டு அவர்களிடம் உள்ள மீதம் உள்ள சாதத்தை மற்ற பணியாளர்களிடம் பகிர்ந்து கொள்வதால் விதவிதமான சாதங்கள் ஒவ்வொரு பணியாளரிடமும் குறிப்பிட்ட விகிதாசாரத்தில் விதவிதமான சாதங்கள் வந்து சேர்ந்து விடுகிறது.

அதேபோல்தான் ஆகாசம், வாயு, நெருப்பு, நீர், பூமி என சூக்ம பஞ்சபூத தத்துவங்கள் தமோ குணத்தில் 50% ஐ வைத்துக்கொண்டு மீதம் உள்ள 50% தமோ குணத்தை மற்ற நான்கு பூத தத்துவங்களுக்கு பகிர்ந்து கொள்கிறது. எனவே ஒவ்வொரு சூக்ம பஞ்சபூதங்களிடம் உள்ள 50% தமோ குணத்தையும், மீதம் உள்ள 50% தமோ குணத்தை மற்ற பூத தத்துவங்கள் பெற்று ஸ்தூல சரீரங்கள் தோற்றுவிக்கப்படுகிறது. அதாவது

68

இந்த பிரபஞ்சம் ஒவ்வொரு சூக்ம பஞ் சபூதங்களிடம் உள்ள தமோ குணம் கலந்த ஸ்தூல சரீரங்களாக தோற்றுவிக்கப்பட்டது என சாஸ்திரம் கூறுகிறது.




அதாவது ஆகாச பூதத்தில் உள்ள தமோ குணத்தில் பாதியும் (50%) மற்ற பூதங்களில் உள்ள தமோ குணமும் குறிப்பிட்ட விகிதாசாரத்தில் கலந்து உள்ளது. இதனை பஞ்சிக்கரணம் என்று சமஸ்கிருதம் கூறுகிறது. அதாவது ஆகாச பூத தத்துவத்தில் உள்ள தமோ குணமும் மற்ற பூத தத்துவங்களான வாயு, நெருப்பு, நீர், பிரிதிவி போன்றவற்றில் உள்ள தமோ குணங்கள் குறிப்பிட்ட விகிதாசாரத்தில் கலந்து நாம் காணும் ஸ்தூல சரீரங்கள் தோற்றுவிக்கப்பட்டன என்று சாஸ்திரம் கூறுகிறது.

எனவே உலகில் உள்ள அனைத்து மனிதர்களிடமும் சத்வ, ரஜோ, தமோ என மூன்று குணங்களும் கலந்து காணப்படுகின்றன. சில மனிதர்கள் சில நேரங்களில் சத்வ குணத்தோடு இருந்து செயல்படுகின்றான். சில மனிதர்கள் சில நேரங்களில் ரஜோ குணத்துடன் இருந்து செயல்படுகின்றான். அதே மனிதன் தமோ குணத்துடன் இருந்து சில நேரங்களில் செயல்படுகின்றான். எடுத்துக்காட்டாக ஒரு வீட்டில் அப்பா தன்னோட மகனை காலையில் அன்புடன் அழைத்து அன்பாக பேசி விட்டு வெளியே செல்கிறார். அதே அப்பா மாலையில் வீடு திரும்பும்போது மகனிடம் கோபத்துடன் பேசுகிறார். அதே அப்பா மகனுடன் இரவில் அன்பாகவும் கோபமாகவும் பேசாமல் சோம்பலுடன் நாற்காலியில் அமர்ந்து விடுகிறார்.

அப்பா தன்னோட மகனிடம் காலையில் அன்பாக பேசியது சத்வ குணம், மாலையில் அவர் மகனிடம் கோபப்பட்டு பேசியது ரஜோ குணம், இரவில் மகனிடம் பேசாமல் அவர் சோம்பலாக இருப்பது தமோ குணம் ஆகும். உலகில் பிறந்த ஒவ்வொரு மனிதனிடமும் மூன்று குணங்கள் கலந்து இருக்கின்றன. சில மனிதர்களிடம் சத்வ குணம் அதிகமாகவும் மற்ற குணங்களான ரஜோ, தமோ குறைவாகவும் இருக்கலாம். சில மனிதர்களிடம் சத்வ குணம் குறைவாகவும் மற்ற குணங்களான ரஜோ, தமோ அதிகமாகக்கூட இருக்கலாம்.

ஒவ்வொரு மனிதனிடம் ரஜோ, தமோ, சத்வ என மூன்று குணங்கள் கலந்தே காணப்படுகிறது. முற்றும் துறந்த முனிவர்களிடமும் மூன்று குணங்கள் இருக்கின்றன. விஸ்வாமித்திரர், துர்வாச முனிவர்கள் தவத்தின் மூலம் வலிமை பெற்றவர்கள். ஆனால் அவர்களிடம் கோபம் என்னும் ரஜோ குணம் இருக்கிறது. ஆனால் அவர்களிடம் மற்ற சாதாரண மனிதர்களைக் காட்டிலும் சத்துவ குணம் அவர்களிடம் நிறைந்து இருந்தது.

இந்த உலகத்தில் மனிதன் மனநிம்மதி இல்லாமல் அவன் திறமையாக செயலாற்ற முடியாமல் இருப்பதற்குக் காரணம் என்ன என்று சிந்தித்துப் பாருங்கள். அவன் இன்னும் 25 ஆண்டுகள் கழித்து நடக்கப்போகிற தன்னோட குழந்தைகளுடைய திருமணத்திற்கு பணம் இல்லையே என்று கவலைப்பட்டுக்கொண்டு இருக்கிறான். அவன் இன்னும் 17 ஆண்டுகள் கழித்து கல்லூரியில் படிக்கப்போகிற பையனுக்கும் பெண்ணுக்கும் பணம் இல்லையே என்று இப்போதே கவலைப்பட ஆரம்பித்து விடுகிறான். உலகத்தில் மன நிம்மதி இல்லாமல் இருப்பதற்கு



எழுத்தாளர்
பூ.சுப்ரமணியன்




இதுவும் ஒரு காரணம்.

மனிதர்கள் எதிர்காலத்தை நினைத்து ஓரளவு கவலைப்படலாம். அது தாமரையிலைத் தண்ணீர்போல் இருக்க வேண்டும். படகு தண்ணீரில் மூழ்கி விடாமல் இருந்தால்தான் அக்கரையை நாம் சென்றடைய முடியும். அதாவது படகு தண்ணீரில் போகலாம். ஆனால் அந்தத் தண்ணீர் படகுக்குள் வராமல் பார்த்துக்கொள்ள வேண்டும். அதுபோன்றுதான் கவலைகள் நமது மனதை முழுவதும் ஆக்கிரமிப்பு செய்து விடாமல் மனதை பக்குவப்படுத்திக்கொள்ள வேண்டும். அப்போதுதான் நாம் விரும்பும் தேடும் மனநிம்மதி கிடைக்கும்.

இறைவன் நம்மையெல்லாம் காரண காரியங்களோடுதான் வழி நடத்திச் செல்கி றான் என்பதை நாம் உணர வேண்டும். பகல் போய் விட்டதே என்று யாரும் வருத்தப் படுவதில்லை. இரவு வந்து விட்டதே என்று யாரும் வருத்தப்படுவதில்லை. பிறப்பு இறப்பு என்பது உலகில் தவிர்க்க முடியாதது. அதே போல் வாழ்வில் துன்பம், இன்பம் உயர்வு, தாழ்வு என்பதும் நிரந்தரம் இல்லை என்ற மனப் பக்குவம் அடைவதற்கு நாம் இறை வழிபாடு பஜனை, தியானம் போன்ற வைகளில் ஈடுபட வேண்டும். ஒரு கதையில் வரும் எமதர்மன் கூறிய மூன்று தேவரகசியங்களைப் பற்றி நாம் சிந்தித்து செயல்படும்போது மனிதன் மன அமைதியுடன் வாழ்வதற்கு முடியும். முதலா வது தேவ ரகசியம் ஏழையாக இருப்பதும்பணக்கார னாக இருப்பதும் மனிதனுடைய எண்ணங் களால் நடக்கிறது. இதனை பேச்சு வழக்கில் ‘அவன் எண்ணம்போல்தான் வாழ்வு அமைத்தி ருக்கு ‘ என்று கூறுவதைக் கேட்டிருப்போம்.

இரண்டாவது எது நடந்ததோ அதற்கு இறைவன் ஏதோவொரு மாற்றுவழி வைத்திருப்பான். மனிதனின் மனம் வாக்கு செயல்பாடுகளில் உள்ள ஈகோவினாலும் அறியாமையினாலும் சாதி மதம் வேறுபாடுகளினாலும் இறைவன் ஏதோவொரு மாற்றுவழி வைத்திருப்பான் என்பது பற்றி அவர்களால் புரிந்துகொள்வதற்குகூட முடிவதில்லை. எடுத்துக்காட்டாக ஒருவன் வேலைக்காக நேர்முகத்தேர்வுக்கு செல்கிறான் என்று வைத்துக் கொள்வோம். அவன் அந்த நேர்முகத்தேர்வில் தேர்வு செய்யப்படவில்லை என்பதை அறிந்தவுடன் மனமொடிந்து உட்கார்ந்து விடுவான். அவன் அவ்வாறு கவலைப்படாமல் இந்த வேலையைவிட உயர்ந்த வேலை நமக்கு கிடைக்கும் அல்லது இந்த

வேலையில் சேர்ந்தால் ஏதாவதொரு சிக்கலில் நாம் மாட்டிகொள்வோம் என்று நினைத்து ஆறுதல் அடைய வேண்டும். இறைவன் ஏதோவொரு மாற்றுவழி வைத்திருப்பான் என்று நம்பிக்கையுடன் அவன் இருக்க வேண்டும்.

மூன்றாவது எந்த நேரத்திலும் இறப்பு வரலாம். இறந்தவனை சுமந்து செல்பவனும் ஒருநாள் இறந்து விடுவான் என்பதைக்கூட இறந்தவனை சுமந்து செல்பவன்கூட அப்போது நினைத்துப் பார்ப்பதில்லை. இந்த உலகத்தில் ஏதோ நூறு ஆண்டுகள் இருநூறு ஆண்டுகள் பட்டா போட்டுக் கொண்டிருப்பதாக இந்த மனிதர்கள் தங்களுக்குள் வீணாக நினைத்துக்கொண்டு குழம்பிக்கொண்டிருக்கிறார்கள்.

நேற்று இருந்தவன் இன்று இல்லை. அதுதான் இந்த கலியுகத்தின் எதார்த்தமான உண்மை தத்துவம் ஆகும். அது தெரியாமல் ஒவ்வொருவரும் நான் மட்டும் நிரந்தரமாக இருப்பேன் என்று மனதில் எண்ணிக்கொள்கிறார்கள். அதனால் அவனை அறியாமல் தான் மட்டும் உலகில் நிரந்தரமாக இருப்பதாக நினைத்துக்கொண்டு மனிதர்கள் உற்றார் உறவினர் நண்பர்கள் போன்ற மற்றவர்களிடமும் நிதானமின்றி நடந்துகொண்டும் செயல்பாடுகளிலும் ஈடுபட்டுக்கொண்டு இருக்கிறார்கள். இந்த அஞ்ஞானம்தான் உலகில் உள்ள துன்பங்களுக்கு எல்லாம் மூல காரணம் என்று சாஸ்திரம் கூறுகிறது.

எனவே நாம் இதுபோன்ற ஆன்மீகக் கதைகள் மூலம் விளக்கப்பட்ட தேவ இரகசியங்களைப் பற்றி நன்கு புரிந்துகொண்டு அதன்படி செயல்பட்டு வாழப் பழகிக்கொள்ள வேண்டும். அதாவது நாம் மனபக்குவம் பெற்றுவிட்டால் இந்த உலகில் வாழும்வரை மனநிம்மதியுடன் வாழமுடியும்.

பிரபஞ்சத்தில் உள்ள அனைத்து உயிர்களும் பஞ்சபூதங்களின் சேர்க்கைதான் என்று சாஸ்திரம் கூறுகிறது அதாவது அண்டத்தில் உள்ளதுதான் பிண்டத்தில் உள்ளது என்று சாஸ்திரம் கூறுகிறது. அண்டம் என்றால் இந்த பிரபஞ்சம், பிண்டம் என்பது நமது சரீரம் ஆகும். நமது மனம் துன்பப்படும்போதெல்லாம் பஞ்சபூதங்கள் பற்றி, முக்குணங்கள், தேவ ரகசியங்கள் போன்றவைகள் அதன் இயல்புகள் பற்றி சிந்திக்கும்போது துன்பங்களிலிருந்து விடுதலை கிடைக்கும். பொதுவாக நமக்கு ஏற்படக்கூடிய ஆன்மீகச் சிந்தனைகள் இயல்பாக நம் மனதை அமைதி வழிக்கு உறுதியாக இழுத்துச் செல்லும் என்பதை நாம் உணர வேண்டும்.

– அமைதி தொடரும்

**எழுத்தாளர் பூ.சுப்ரமணியன்**
Tahsildar (Retd)
கைபேசி: 9894043308

ஆன்மிகம் • தத்துவம் • உடல்நலம் • பலன்கள்
புத்தம் புதிய ஆன்மீக செய்திகளை தினமும் படியுங்கள்
www.aanmeegamalar.com
ஆன்மிகமலர்.காம்



# உலக அனுபவம் பெற்ற பின்புதான் பக்தி அனுபவமே தோன்றுகிறது

சீடன்: கடவுளைப் பார்க்க முடியுமா?

ஞானி: (சிரித்தபடி) மனிதனின் உணர்வும் பக்தியும் இணையும்போது கடவுளைப் பார்க்கலாம்.

சீடன்: தியானப் பயிற்சிகள் எப்படி இருக்க வேண்டும்?

ஞானி: சுருக்கமாக இருக்க வேண்டும்.

சீடன்: ஞானம் என்றால் என்ன?

ஞானி: பிரபஞ்சத்தின் உண்மையைத் தெரிந்து கொள்வது.

சீடன்: குரு அனுக்கிரகம் என்றால் என்ன?

ஞானி: சொல்லாமல் விளங்குவது.

சீடன்: அறிவு விளக்கம் என்றால் என்ன?

ஞானி: சரியான பாதையைக் காட்டுவது.

சீடன்: அனுபவம் என்றால் என்ன?

ஞானி: நாமே நம்மிடம் உள்ள இறைவனை வெளிக்காட்டுவது.

சீடன்: பூஜைகள் எதற்கு?

ஞானி: நம் வாழ்வு முன் எல்லாவித கலைகளையும் உணர.

சீடன்: மனிதன் எதற்கு ஆராய்ச்சி செய்கிறான்?

ஞானி: (சிரித்தபடி) ஆர்வத்தின் கோளாறு.

சீடன்: அறிவு என்றால் என்ன?

ஞானி: பிரபஞ்சத்தைப்பற்றிஇறைவனைப் பற்றி எல்லையில்லாமல் தெரிந்து கொள்ள தேவைப்படும் ஞானத்திற்கு அறிவு எனப்படும்.

சீடன்: அனுஷ்டானம் என்றால் என்ன?

ஞானி: தினம் தினம் ஆண்டவனை வழிபடுவது.



சீடன்: விஞ்ஞானி என்பவன் யார்?

ஞானி: காலத்தைக் கடந்தவன். காலத்தை வெல்லத்தான் மனிதன் காலமெல்லாம் முயலுகிறான்.

சீடன்: புண்ணியம் என்றால் என்ன?

ஞானி: நம்மைப் பற்றி நமக்கே புரிவதுதான்.

சீடன்: பக்தன் எப்பொழுது உருவாகிறான்?

ஞானி: மனம் ஆண்டவனுக்காகச் செயல்படும்போது.

சீடன்: தியானம் என்றால் என்ன?

ஞானி: மனதோடு சம்பந்தப்பட்ட அனைத்து பயிற்ச்சிகளுக்கும் தியானம் எனப்படும்.

சீடன்: ஞானம் உருவாக வழி என்ன சுவாமி?

ஞானி: மனச்சோம்பல் அகன்றால் தன் மூளையையே கவனிக்காமல், அது ஞானம் உருவாக வழி.

சீடன்: குண்டலினி யோகம் என்றால் என்ன?

ஞானி: உடலையும் மனதையும் சேர்ப்பது குண்டலினி.

சீடன்: கடவுளை செயற்கை எனக் கூறுகிறார்களே?


ஞானி: மறைந்திருந்த கடவுளை மனிதன் கண்டுபிடித்ததால் அதை செயற்கை என்று சொல்லக் கூடாது.

சீடன்: பக்திக்கு உலகைத் துறக்க வேண்டுமா?

ஞானி: உலக அனுபவம் பெற்ற பின்புதான் பக்தி அனுபவமே தோன்றுகிறது.

சீடன்: பூஜைகள் கட்டாயம் செய்ய வேண்டுமா?

ஞானி: பூஜை செய்ய ஆசைப் படாதே. 'விருப்பத்தைத் தா' என்று எண்ணி பிராத்தனை செய்.




ஆசிரியர், வெளியீட்டாளர்

**N.P.சந்திரன்**

**C.V. நடராஜன்**

செல்: 9444228203

♦♦♦

முதன்மை செய்தியாளர்:
அழகுராஜா
செல்: 9994323622

♦♦♦

துணை ஆசிரியர்கள்
ஷியாம்சுந்தர்,
ஸ்ரீபதி, ஸ்ரீவர்ஷினி, சாய்,
குருபிரியா
வேல் செல்

♦♦♦

வடிவமைப்பு
SML கிராபிக்ஸ்
செல்: 9444228203

நிர்வாக அலுவலகம்

**aanmeegamalar.com**

நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு,
கோடம்பாக்கம், சென்னை 600024.



## ஆசிரியர் குழுவில் இணையலாம்

ஆன்மிகமலர்.காம் இதழில் இணைந்து செயல்பட விரும்புகிறீர்களா?... ஆன்மிகம் சம்பந்தப்பட்ட செய்திகளை எழுத ஆர்வமுள்ளவர்கள் தொடர்பு கொள்ளுங்கள்.

தொடர்பு கொள்ளவும்

**9444228203**


சீடன்: கடவுளைப் பற்றி எல்லோரும் பேசுகின்றனரே?

ஞானி: கடவுளைப் பார்க்காதவனுடன் கடவுளைப் பற்றி பேசுவது திண்ணைப் பேச்சு.

சீடன்: சமயம் எப்படி இருத்தல் வேண்டும்?

ஞானி: உணர்ச்சிகளோடு அணுகும் விஷயம் இல்லை சமயம். மனிதன் எல்லா விஷயங்களையும் உணர்ச்சிக ளோடுதான் அணுகுவதால் சமயத்தில் குழப்பம் தோன்றுகிறது.

சீடன்: கொள்கையில் உறுதி கொள்வது எப்பொழுது?

ஞானி: கொண்ட கருத்தில் பக்தி வரும்போது.

சீடன்: ஆணவம் மறைவது எப்பொழுது?

ஞானி: மனமும் பணமும் ஒன்று என உணரும்போது.

சீடன்: கடவுளிடம் பக்தி வருவது எப்பொழுது?

ஞானி: மண்ணின் மீது பக்தி வரும்போது.

சீடன்: பக்தியைப் பற்றி முழு விவரம் உணருவது எப்பொழுது?

ஞானி: வழிபாட்டிற்குள் போகும்போது.

சீடன்: பாவமே செய்யாத மனிதனாவது எப்பொழுது?

ஞானி: இறைவனை எண்ணாமல் இருப்பதே பாவம் என உணரும்போது.

சீடன்: மனிதன் பக்தனாவது எப்பொழுது?

ஞானி: அற்புதத்தை கண்டு பிரமிக்காமல் ரசிக்கும்போது.

சீடன்: மனிதன் நிம்மதியாக இருப்பது எப்பொழுது?

ஞானி: எந்தச் சட்டங்களையும் தனக்கு போட்டுக் கொள்ளாதபோது.

சீடன்: ஞானம் வருவது எப்பொழுது?

ஞானி: நம் வெட்கத்தில் தான் கடவுள் ஒளிந்து கொண்டிருக்கிறான் என்று உணரும்போது.

சீடன்: ஞானம் வருவது எப்பொழுது?

ஞானி: தடைகளும் தாமதங்களும் தானாக விலகும்போது.

சீடன்: சிந்தனையாளன் உருவாவது எப்பொழுது?

ஞானி: எல்லாம் வல்லவன் மனிதன் என எண்ணும்போது.

சீடன்: பக்தன் உருவாவது எப்பொழுது?

ஞானி: எல்லாம் வல்லவன் இறைவன் என உணரும்போது.

சீடன்: சக்தி நமக்கு வருவது எப்பொழுது?

ஞானி: கடவுளோடு நம்மை சம்பந்தப்படுத்திக் கொள்ளும்போது.

ஞானச்சேரி ஞானிகள்

**பூஜ்ய ஸ்ரீசத்குரு சதாசிவ பிரும்மேந்திரரின்**

அருளுரையிலிருந்து தொகுத்தது மேலும் விபரங்களுக்கு

அழகுராஜா எஸ்.மகாதேவன், போன் 098410 28028




# கடலை அடைத்த கருணாமூர்த்தி

இம்மண்ணுலகில் சத்தியத்தையும், தர்மத்தையும் நிலைநாட்டிட, அந்தப் பரந்தாமனே எடுத்த அற்புத அவதாரம்தான் ஸ்ரீ இராமச்சந்திர பிரபு.

ஸ்ரீ இராமர் இராவணனை வதம் செய்ய இலங்கைக்குச் செல்லும் முன்பு தென்நாட்டின் பல இடங்களில் தெய்வ வழிபாடுகளை செய்துள்ளார். அதோடு, பல அற்புதங்களையும் நிகழ்த்தியுள்ளார்.

அப்படியாக தென்னாடு வந்த ஸ்ரீ இராமபிரான், முதலில் உப்பூரிலே கணபதியை ஸ்தாபித்து வழிபடுகின்றார்.

அதன்பின்னர், குல குரு வசிஷ்ட மகரிஷியின் ஆலோசனைப்படி பிதுர் கடன்களை செய்ய உசிதமான, பராசக்தியின் அக்குள் பகுதி விழுந்த வீரசக்தி பீடமாகத் திகழும் தேவிப்பட்டிணத்தை




அடைந்து, அன்னை உலகநாயகியை வணங்கி, வழிபட்டு, அன்னையின் திருவருளைப் பெற்று, பின்னர் கடற்கரையில் முறையாக பிதுர் கடன் களையும் செய்தார்.

கடலில் நவபாஷாணத்தால் ஆன நவக் கிர கங்களை ஸ்தாபிக்க எண்ணம் கொண்டார்.

ஆனால் அங்கோ சமுத்திரத்தின் அலைகள் ஆக்ரோஷமாக இருப் பதைக் கண்டு தயங்கி நின்றார். பின்னர் அங்கே கரையில் ஆதியாக வீற்றிருந்து அருளும் ஸ்ரீஆதி ஜெகந்நாத பெருமாளை மனதில் நினைத்து வழிபடுகின்றார்.

பரந்தாமனின் மறு உருவமே ஸ்ரீஇராமர் என்றபோதிலும்,மனித னாகப் பிறப்பெடுத்தால் மகா விஷ்ணுவை சரணடைய வேண்டும் என்கிற உயர்ந்த தத்துவத்தை உலகோருக்கு உணர்த்திக் காட்டினார்.

பின், ஆதி ஜெகந்நாதரின் பேரருளால் முன்னம் எழும் பியப் பேரலைகள் கடலுக்குள் பின்வாங்கிச் சென்றன.

கள்ளழகனின் கருணை யால் கடலில் இறங்கிய கோதண்டராமர, முறைப்படி நவபாஷாண நவகிரகங்களை நிறுவி, நயம்பட பூசனைப் புரிந்தார். நம்பிக்கையோடு இலங்கையை நோக்கி நடை போட்டார்.

பொங்கிப் பெருகிவந்த அலைகளை அடைத்தருளிய தால், இங்கு ஸ்ரீமந்நாராயணர் கடலடைத்த ஸ்ரீ ஆதி ஜெகந் நாதப் பெருமாள் என்று போற்றப்படுகின்றார்.

தேவிபட்டிணம் கடற்கரை யில் ஸ்ரீ இராமபிரானின் கரங்களால் ஸ்தாபிக்கப்பட்ட நவக்கிரகங்களை வணங்கி, வழிபட்டு, பின்னர் சற்று தூரம் நடந்தால்... விமானத்துடன் கூடிய பெருமாள் கோவில் காணப்படுகின்றது.

முதலில் முன்மண்டபத்தில் பலிபீடம் மற்றும் பெரிய திருவடிகளான ஸ்ரீ கருடாழ்வார் தரிசனம்.

மகாமண்டபத்தின் வெளிப்புற சுவற்றில் ஸ்ரீ ஆஞ்சநேயர் அருள் பாலிக்கின்றார். பின், நேராக அர்த்தமண்டபம் அடைந்து, ஸ்ரீ தேவி பூதேவி உடனான கடலடைத்த ஸ்ரீ ஆதி ஜெகந்நாத பெருமாளைக் கண்டு பரவசம் அடைகின்றோம். தனது மேலிரு கரங்களில் சங்கு சக்கரம் ஏந்தி, கீழிரு கரங்களில் அபயவரதம் காட்டி, பெரியதொரு திருமேனியராக, அமர்ந்தவண்ணம் அருட்சேவை சாதிக்கின்றார்.

உற்சவ மூர்த்தங்களாக ஸ்ரீ கிருஷ்ணர், ஸ்ரீ சுதர்சனமூர்த்தி உள்ளனர். நடுவே அன்னை சீதாபிராட்டி மற்றம் இளவல் லக்ஷ்மணரோடு திவ்ய தரிசனம்


மோ.கணேஷ்

அளிக்கிறார் ஸ்ரீ இராமச்சந்திர மூர்த்திகள். அற்புத தரிசனம். ஆனந்தப் பரவசம்.

ஆலய வலம் வருகையில் ஆண்டாளைத் தனிச் சன்னிதியில் தரிசிக்கின்றோம். ஒரே திருச்சுற்றினைக் கொண்டுள்ளது ஆலயம். ஸ்ரீ விமானம் காண்போரைக் கவர்ந்திழுக்கிறது.

பாண்டிய மன்னர்களின் கலைநயம் ஆலயமெங்கும் பிரதிபலிக்கின்றது.

தல தீர்த்தமான சக்கர தீர்த்தம் ஆலயத்தின் எதிரே அமைந்துள்ளது.

பாஞ்சராத்ர ஸ்ரீ வைஷ்ணவ முறைப்படி தினமும் ஒரு கால பூஜை நடைபெறுகின்றது. அனேக வைஷ்ணவ சம்பிரதாயங்களும், விசேடங்களும் சிறப்புற நடத்தப்படுகின்றன.

தமிழக அரசின் கட்டுப்பாட்டில் உள்ள இவ்வாலயம் தினமும் காலை 7 மணி முதல் மதியம் 11 மணி வரையும், மாலை 5 மணி முதல் இரவு 7 மணி வரையும் திறந்திருக்கும்.

இந்த தேவிபட்டிணத்தில் கடலடைத்த பெருமாளோடு, நவபாஷாண நவகாரகங்கள், ஸ்ரீ திலக்கேஸ்வரர் ஆலயம் மற்றும் சக்தி பீடமான ஸ்ரீ உலகநாயகி அம்மன் ஆலயம் ஆகியன மிகவும் பிரசித்தம்.

ஆடி அமாவாசையில் இங்கு இலட்சக்கணக் கானோர் வந்து பிதுர் வழிபாடுகள் செய்வது மிகவும் பிரபலமாகும்.

புதுக்கோட்டை இராமேஸ்வரம் பேருந்து சாலையில் சுமார் 115 கிலோ மீட்டர் தொலைவிலும் இராமநாதபுரம் நகரிலிருந்து 16 கிலோமீட்டர் தூரத்திலும் அமைந்துள்ளது தேவிபட்டிணம்.

– பழங்காமூர் மோ.கணேஷ்.
தொடர்பு எண்: 9789156179

# எது ஆடி அமாவாசை




2023–ஆம் ஆண்டு ஜூலை 17ம் தேதி சூரியன் மிதுன ராசியிலிருந்து கடக ராசிக்கு மாறுகிறார். அன்றைய தினமே ஆடி மாதம் பிறக்கிறது. அன்றைய தினம் அமாவாசையும் சேர்ந்து வருகிறது. மாதப்பிறப்பு, தக்ஷிணாயனம், அமாவாசை என்று மூன்று புண்ணிய காலங்கள் இணைந்த ஆடிப் பண்டிகையை இந்தாண்டு கண்டு களிக்க உள்ளோம்.

மேலும், ஆடி மாதம் 31ம் தேதி (ஆகஸ்ட் 16ம்தேதி) மீண்டும் அமாவாசை வருகிறது. இப்படி ஒரே மாதத்தில் இரண்டு அமாவாசை தினங்கள் வருகிற போது, ஆடி அமாவாசை எனும் சிறப்பு எதற்கு உண்டு?

எல்லோருக்கும் ஏற்படும் ஐயம் தானே? அது ஏன்?

நாம் நம் முன்னோர்களை வணங்கி வழிபடுவ தால் நமக்கு அத்தகைய கேள்வி எழுகிறது.

ஒரே மாதத்தில் இரண்டு அமாவாசையோ, பவுர்ணமியோ, வந்தால் முதலில் வருவதை விட்டு விட்டு, பின்னதையே சிறப்புடையதாக ஏற்க வேண்டும் என்கிறது சாஸ்திரம்.

**பூர்வம் த்யக்த்வா பரம் க்ராஹ்ய**

என்பது வாக்கியம்.

இதன்படி பூர்வம் என்கிற முதலாவதை த்யக்த்வா விட்டு விட்டு, பரம் என்கிற பின்னால் வருவதை க்ராஹ்ய எடுத்துக் கொள்ள வேண் டும், என்பது தான் அதன் பொருள்.

எனவே, ஆடி முதல் தேதியில் வரும் அமாவா சையை சாதாரணமாக தர்ப்பணம் செய்யும் நாளாகவும், ஆடி 31ம் தேதி வரும் அமாவாசையை சிறப்புடைய ஆடி அமாவாசையாகக் கொண்டு, கடல் ஆறு, குளக்கரைகளில் தர்ப்பணம், தானம் முதலியன செய்து முன்னோரின் ஆசியைப் பெறுவோமாக.



# காண்டீபம் கூட கட்டுப்படும் கண்ணனின் மகத்துவத்திற்கு

சூதாட்டத்தில் தோற்ற பாண்டவர்கள், தங்கள் அனைத்துச் செல்வங்களையும் துரியோதனனிடம் பறிகொடுத்தார்கள். அப்போது கர்ணனை அழைத்த துரியோதனன், “கர்ணா! இனி இவர்களின் அனைத்துச் சொத்துக்களும் நமக்கே சொந்தம். அக்னி பகவானின் பரிசாக அர்ஜுனன் பெற்ற காண்டீவ வில்லை இனி நீ எடுத்துக் கொள்!” என்றான்.

ஆனால் கர்ணனோ காண்டீவத்தை வாங்க மறுத்துவிட்டான்.

“நான் எனது வலிமையிலும் திறமையிலும் நம்பிக்கை வைத்திருக்கிறேன்.

அவற்றைக் கொண்டு அர்ஜுனனை வெல்வேன். தேவர்களின் அருளால் கிட்டிய இந்த வில் எனக்குத் தேவையில்லை!” என்று சொன்னான் கர்ணன்.

“ஆஹா! நீ அல்லவோ சுத்த வீரன்! அர்ஜுனன் காண்டீவத்தை நம்புகிறான்.

நீ உன் திறமையை நம்புகிறாய் !” என்று கர்ணனைத் துரியோதனன் பாராட்டினான்.

அர்ஜுனன் வனவாச காலத்தில் இந்தச் சம்பவத்தை வியாசரிடம் சொல்லி மிகவும் வருந்தினான். இதைக் கேட்டுச் சிரித்த வியாசர், “கர்ணன் காண்டீவத்தை வாங்க மறுத்ததற்கு வேறு காரணம் உள்ளது! அதை அவன் வெளிக் காட்டிக் கொள்ளவில்லை!” என்றார்.

“அது என்ன?!” என்று கேட்டான் அர்ஜுனன்.

“நேரம் வரும் போது சொல்கிறேன் !” என்றார் வியாசர்.

பல ஆண்டுகள் கழிந்தன.

மகாபாரத யுத்தம் முடிந்து, தர்மபுத்திரர் முடி சூடிய பின், கண்ணனைச் சந்திக்க அர்ஜுனன் துவாரகைக்குச் சென்றான்.

“அர்ஜுனா! நான் எனது அவதாரத்தை முடித்துக் கொண்டு வைகுண்டம் செல்லவுள்ளேன்.

அதனால் எனது அரண்மனையிலுள்ள பெண்களை எல்லாம் நீ பாதுகாப்பாக அழைத்துக் கொண்டு இந்திரப்ரஸ்தத்துக்குச் சென்று விடு!” என்று கூறினான் கண்ணன்.

கனத்த மனத்துடன் கண்ணனிடமிருந்து விடைபெற்ற அர்ஜுனன், தனது தேரில் பெண்களை அழைத்துக் கொண்டு சென்றான்.

வழியில் சில கொள்ளையர்கள் தேரை நிறுத்தி அர்ஜுனனைத் தாக்கினார்கள்.

அவர்களைப் பதிலுக்குத் தாக்குவதற்காகக் காண்டீவத்தை எடுக்க முற்பட்டான் அர்ஜுனன். ஆனால் அவனால் காண்டீவத்தைத் தூக்க முடியவில்லை. பற்பல பேரரசர்களை வீழ்த்திய வனும், யாராலும் வீழ்த்த முடியாதவன் என்று போற்றப்படுபவனும், வில் விஜயன் எனப் பெயர் பெற்றவனுமாகிய அர்ஜுனனை அந்தச் சாதார ணத் திருடர்கள் வீழ்த்திவிட்டார்கள். தன் வாழ்வில் முதன் முறையாகத் தோல்வியைச் சந்தித்தான் அர்ஜுனன்.

அதுவும் வெறும் சாதாரணத் திருடர்களிடம்

வெட்கத்தால் தலைகுனிந்த நிலையில், இந்திர ப்ரஸ்தத்துக்கு நடந்தான் அர்ஜுனன். அப்போது அவன் எதிரில் வந்தார் வேத வியாசர்.


“அர்ஜுனா ! நீயும் உன் சகோதரர்களும் பூமியில் இருந்து புறப்படுவதற்கான காலம் வந்து விட்டது. இப்போது நடந்த சம்பவம் அதை நினைவூட்டவே ஏற்பட்டது !” என்று கூறினார் வியாசர்.

"கண்ணனே புறப்பட்ட பின், நாங்கள் பூமியில் இருந்து என்ன செய்யப் போகிறோம். நாங்களும் புறப்படத் தயார். ஆனால், என் மனதில் பெரும் ஐயம் எழுந்துள்ளது.

இதுவரை நான் காண்டீவத்தைப் பொம்மை போலக் கருதி அனாயாசமாகக் கையில் ஏந்தி னேன். ஆனால் இப்போது அது மலை போல் கனமாக உள்ளது. என்னால் அதைத் தூக்க முடியவில்லையே! என்ன காரணம்?” என்று கேட்டான் அர்ஜுனன்.

அதற்கு வியாசர், “உன்னால் இந்தக் காண்டீவத்தை நிச்சயமாகத் தூக்க முடியாது. கண்ணன் உன்னுடன் இருந்தவரை இந்தக் காண்டீவத்தை ஏந்துவதற்கான பலத்தை அவன் உனக்கு அளித்தான். அவனது அருளால்




தான் நீ காண்டீவத்தைப் பொம்மை போலத் தாங்கினாய். இப்போது அவன் பூமியை விட்டுச் சென்று விட்டதால், இதை உன்னால் தூக்க முடியவில்லை!” என்றார்.

மேலும், “சூதாட்டத்தில் நீ காண்டீவத்தை இழந்த போது, அதைக் கர்ணன் வாங்க மறுத்தானே, ஏன் தெரியுமா? கண்ணனின் அருள் பெற்ற நீ காண்டீவத்தைத் தூக்கிவிட்டாய்.

ஆனால் கண்ணனின் அருள் பெறாத கர்ண னால் இந்தக் காண்டீவத்தை அசைக்கக் கூட இயலாது. இது கர்ணனுக்கும் நன்றாகத் தெரியும்.

அந்தக் காரணத்தை வெளியே சொல்ல விரும்பாத கர்ணன், கௌரவமாகத் தான் சுத்த வீரன் என்றும் இந்த வில்லை நம்பித்தான்இல்லை என்றும் கூறிச் சமாளித்து , காண்டீவம் தனக்கு வேண்டாம் என்று கூறினான் !” என்றார் வியாசர்.

இதிலிருந்து பலசாலிகள் என்று போற்றப்படுப வர்களுக்கும் கூட, அந்த பலத்தைத் திருமால்தான் வழங்குகிறார் என்பதை நாம் உணர முடிகிறது.

இக்கருத்தை “ஸத்வம் ஸத்வவதாம் அஹம்” (பலசாலிகளின் பலமாக நானே இருக்கிறேன்) என்று கண்ணன் கீதையில் கூறுகிறான்.

இத்தகைய மகா பலத்தோடு கூடியவராகத் திருமால் விளங்குவதால் ‘மஹாபல:’ என்று அழைக்கப்படுகிறார்.





# ஸ்ரீராம பக்த ஆஞ்சநேயர் திருக்கோயில், தேனி

மஹோன்னதா பாரதம் அறக்கட்டளையானது நமது சனாதன தர்மத்தின் மறு மலர்ச்சி, நமது கலாச்சாரம் மற்றும் பாரம்பரியங்களைப் பாதுகாத்தல் மற்றும் இளைஞர் களிடையே தேசிய உணர்வை மேம்படுத்துதல் ஆகியவற்றில் ஈடுபட்டுள்ளது.



அதன் பிரச்சாரத்தின் ஒரு பகுதியாக, அறக்கட்டளை யானது தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் 51 அனுமனுக்கு கோயில்களைக் கட்டும் லட்சியத் திட்டத்தைத் தொடங்கியுள்ளது மற்றும் உள்ளூர் இளைஞர்களுக்கு தொழில் திறன்களை வழங்குவ தற்காக கோயிலுடன் சேவா கேந்திராவை நிறுவுகிறது.

ஒவ்வொரு கோவிலிலும் ஒரு பாரம்பரிய கிரானைட் ஹனுமான் சிலை மற்றும் 10 அடி உயர பீடத்தில் குறைந்தபட்சம் 31 அடி உயரத்தில் ஹனுமானின் வண்ணமயமான சுதை விக்ரஹம் இருக்கும்.

யோகா, பாரம்பரிய இசை மற்றும் நடனம், கைவினைப் பொருட்கள், கணினி பயன்பாடுகள், தையல், போட்டித் தேர்வுகளுக்கான பயிற்சி போன்றவற்றைக் கற்பிப்பதன் மூலம் அருகிலுள்ள கிராமங்களில் உள்ள இளைஞர்கள் மற்றும் பெண்களுக்கு ஊக்கமளிக்கும் பிரச்சாரங்களை ஏற்பாடு செய்து திறன்களை வழங்கு வார்கள்.

தமிழ்நாட்டின் தேனிமாவட்டம் செங்குளத்துப்பட்டியில் முதல் கோயிலும் சேவா கேந்திரமும் தொடங்கப்பட்டுள்ளன.

இந்த சேவா கேந்திராவில் முதலில் மாவட்ட அளவிலான போட்டிகளில் விளையாடிய சில சிறுவர், சிறுமியர்களுக்கு செஸ் விளையாடும் பயிற்சியும், இரண்டாவதாக அனைத்து விடுமுறை நாட்களிலும் தேர்ச்சி பெற்ற பெற்றோரால் சிலம்பம் கற்பிக்கப்படுகிறது.

உள்ளூர் ஆசிரியர்களும் பயனாளிகளும் படிப்படியாக சேர்க்கப்பட்டு, அதிகமான மக்களை ஈடுபடுத்தி, உள்ளூர் தேவைக்கேற்ப வேறு சில திறன்களை வழங்குகின்றனர்.

சிவகங்கை மாவட்டம், எஸ்.எஸ்.கோட்டையில் இரண்டாவது ஹனுமான் கோவில் மற்றும் சேவா கேந்திரம் அமைக்கப்பட்டு, இந்த ஆண்டு இறுதிக்குள் கட்டி முடிக்கப்படும் என எதிர் பார்க்கப்படுகிறது.



எஸ்.வெங்கடேசன்

புதுதில்லியைச் சேர்ந்த ராஜாராமன், இந்த அறக்கட்டளையை உருவாக்கி, 51 அனுமன் பிரமாண்ட சிலைகளை நிறுவுவதுடன், பல்வேறு சமயச் செயல்களை நடத்தி அந்தப் பகுதியைச் சுற்றியுள்ள மக்களுக்கு நல்ல ஒழுக்கத்தையும் பண்பாட்டையும் போதிக்க வேண் டும் என்ற தொலைநோக்குப் பார்வையுடன் உருவாக்கினார்.

**– எஸ்.வெங்கடேசன், நொய்டா**
**தொடர்பு எண்: 9811161370**





www.aanmeegamalar.com

## புதுப்பொலிவு அடையுமா?


# 13ம் நூற்றாண்டை சேர்ந்த ஆநிரைகாத்த ஆதிகேசவன் ஆலயம்

தேனி மாவட்டம், ஆண்டிப்பட்டி அருகேயுள்ள தெப்பம்பட்டி கிராமத்தில் மேற்குத் தொடர்ச்சி மலையின் அடிவாரத்தில் மிகவும் பழமையான ஸ்ரீதேவி, பூதேவி சமேத பெருமாள் திருக்கோவில் அமைந்துள்ளது. இந்தக் கோவிலின் சுற்றுச் சுவர்களிலும், கோபுர தூண்களிலும் பழங்கால சிற்பங்கள் அற்புதமாக செதுக்கப்பட்டுள்ளன.

இந்த திருக்கோவிலில் தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் ஆய்வு மேற்கொண்டதின் மூலம் 13ஆம் நூற்றாண்டை சேர்ந்த திருக்கோவில் என்பது ஆன்மீக அன்பர்களுக்கு தெரிய வந்துள்ளது. திருக்கோவிலின் உள்பகுதியில் சில கல்வெட்டுகள் இருப்பதாகவும், தற்போது கோவில் சிதிலமடைந்துள்ளதால் உள்ளே சென்று பார்க்க முடியவில்லை என்றும் இப்பகுதி பக்தர்கள் கூறுகின்றனர்.

இந்தக் கோவிலில் சேவை சாதிக்கும் ஸ்ரீதேவி, பூதேவி சமேத பெருமாளை சுற்றுவட்டாரப் பகுதி



மக்கள் இன்றளவும் வணங்கி வருகின்றனர். சனிக்கிழமை நாட்களில் வெளியூர் பக்தர்களும் அதிகளவில் வந்து வணங்கி செல்வதாக கூறு கின்றனர்.

கோவில் சிதிலமடைந்துள்ளதால்கருவறையில் இருந்த ஸ்ரீதேவி, பூதேவி சமேத பெருமாள் சிலைகளை மட்டும்வெளிப்பகுதி யில் சிறிய அளவில் கட்டிடம் கட்டி வைத்து அபிஷேக,அலங்காரபூஜை கள் செய்து வழிபட்டு வருகின்றனர்.

துளசிச் செடியில், முப்பத்து முக்கோடி தேவர்களும் வாசம் செய்கிறார்கள் என துளசியைச் சிலாகிக்கிறது புராணம். மேலும் பனிரெண்டு சூரியர்களும் அஷ்ட வசுக்களும் அஸ்வினி தேவர் முதலானோரும் வாசம் செய்கின்ற னர். இத்தனை பெருமையும் சாந் நித்தியமும் நிறைந்திருக்கும் துளசியை கொண்டு பெருமாளை பூஜிப்பதும் மிகவும் சிறப்பு சேர்க்கும்.

இத்தல பெருமாள் கோயிலுக்குச் சென்றால் அவசியம் துளசி மாலை சார்த்துங்கள். மாலை வாங்க இயலவில்லையெனில் உள்ளங்கை அள வாவது துளசியை பெருமாளுக்கு சார்த்துங்கள்.



செ.சு.சரவணகுமார்

தங்களது முன்னோருக்கு முன்னோர்காலத்தி லிருந்து இன்று வரை ஆநிரைகாத்த ஆதிகேச வனை வணங்கி வாழ்வில் ஏற்றம் பெற்றசுற்று வட்டாரப் பகுதிகளில் உள்ள மக்களும், ஆன்மீக அன்பர்களும் ஒன்று கூடி பழமையும், தனிச்சிறப்பும் கொண்ட இக்கோவி லை சீரமைக்க வேண்டும் என்பதே அனைவரின் விருப்பம்.

தொகுப்பு: சென்னிவீரம்பாளையம்
செ.சு.சரவணகுமார்
தொடர்புக்கு: 93458 88883.

ஆன்மிகம் • தத்துவம் • உடல்நலம் • பலன்கள்
புத்தம் புதிய ஆன்மீக செய்திகளை தினமும் படியுங்கள்
www.aanmeegamalar.com
ஆன்மிகமலர்.காம்







பாரம்பரியமான,
சத்தான, சுவையான
சமையல் குறிப்புகளை
மிக எளிமையாகவும்,
தெளிவாகவும் அறிந்து கொள்ள

**கீதாசமையல்**

(geetha samayal)

youtube சேனலை பாருங்கள்





geetha samayal வீடியோவை பார்த்து
Like, Share, Subscrib செய்யுங்கள்

# மனச்சோர்வா...?
# தியானம் யோகத்தை நாடுங்கள்
# தெளிவடையும் மனம்

மனிதன் பூமியில் பிறப்பதே தனது பூர்வஜென்ம கர்மாவை தீர்த்துக்கொள்ளவே தவிர வேறு எந்த காரணமும் இல்லை என்று காஞ்சி பெரியவர் கூறுவதுண்டு.

காஞ்சி பெரியவரிடம் வெளிநாட்டு பெண்மணி ஒருவர் தனது சந்தேகத்தை தீர்த்துக் கொள்ளும் நோக்கில், "இந்து மதத்தில் மட்டும் மறுபிறவி, கர்மா என்று இருப்பதாக கூறப்படுகிறதே இதை எப்படி உண்மை என்று நம்ப முடியும்" என்ற வினாவை முன்வைத்தார்.



இதற்கு பதில் ஏதும் கூறாத பெரியவா, அந்தப் பெண்மணியிடம், "அருகில் உள்ள குழந்தைகள் பிறப்பு மருத்துவமனைக்கு சென்று ஒருநாள் தங்கியிருந்த பின்பு என்னிடம் வாருங்கள்" என்று அந்தப் பெண்மணியிடம் கூறி ஆசிர்வதித்து அனுப்பிவைத்தார்.

அடுத்த நாள் மகானிடம் வந்த பெண்மணி யிடம்...

"மருத்துவமனையில் நீங்கள் கண்ட காட்சி என்ன?" என்ற கேள்வியை கேட்டார் பெரியவர்.

"நேற்று பல குழந்தைகள் பிறந்தன, ஒன்று கருப்பு, மற்றொன்று வெள்ளை, ஒன்று ஏழைத் தம்பதிக்கும், மற்றொன்று ஆடம்பரமான பணக்கார தம்பதிக்கும், ஒன்று பசிக்காக அழும் சூழல், மற்றொன்று தங்கத் தொட்டிலில் தாலட்டும் சூழல்... இப்படி பல்வேறு வகையான பிறப்பை நேற்று பார்த்தேன்" என்றார் அந்தப் பெண்மணி.

"இதுதான் பூர்வஜென்ம கர்மா... கர்மா இல்லையென்றால் அனைத்து குழந்தைகளும் ஒரே மாதிரியாகத்தானே பூமியில் பிறந்திருக்க வேண்டும்...

முன்ஜென்மத்தில் விட்டுச் சென்ற கர்மாவை பூர்த்திசெய்ய இறைவனால் இந்த ஒரு ஜென்மம் கொடுக்கப்பட்டுள்ளது. சென்ற ஜென்மத்தில் செய்த கர்மாவின் விளைவால்தான், அந்தக் குழந்தைகள் ஏற்றத்

aanmeegamalar.com

# மனதை திறப்போம் மாயையை அழிப்போம்

தாழ்வுடன் பிறந்திருக்கிறது.

இந்த ஜென்மத்தில் தனது கடமையை முழுவதும் பூர்த்தி செய்ய இந்தப் பிறவியைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். இதற்காகத்தான் மறுபிறவி இறைவனால் கொடுக்கப்பட்டுள்ளது.

இந்து மதத்தில் கர்மாவும், மறுஜென்மமும் ஒரு மனிதனை, மனித நிலையில் இருந்து வேறு நிலைக்கு எடுத்துச் செல்ல இறைவன் தரும் ஒரு வரம்" என்று கூறினார்.

மனிதப் பிறவி என்பதற்கும், தாம் அனுபவிக்கும் நன்மை தீமை என்பதற்கும் நாமே காரணமாக இருக்கிறோம் என்பதை அறிந்தால் போதும் இப்பிறவியை சிறப்பாக கடந்துவிடலாம்.

வீணான ஆசை, மோகம், பாசம், பந்தம் பற்று போன்றவற்றிற்கு இந்த உடலை அடிமைப்படுத்தி மீண்டும் மீண்டும் பிறவி எடுத்து மேல்நிலை அடைய முடியாமல் தவிக்கும் அநேகருக்கு...

இந்த உடலில் இரண்டு வித சோர்வு வந்து விடும், அதில் ஒன்று உடல் சோர்வு, மற்றொன்று மனச் சோர்வு...

சத்தான உணவு, ஆரோக்கியமான வாழ்நிலையை அமைத்துக் கொண்டால் உடல் சோர்வு என்பது தானாக மறைந்து விடும்.

ஆனால் இந்த மனச் சோர்வு என்பதை தீர்க்க சற்று சிரமப்பட்டால்தான் முடியும். இந்த மனச் சோர்வை தீர்க்கும் முயற்சியில் சற்று ஆழ்ந்து இறங்கினால் மனித வாழ்வின் கடமை என்ன என்பது புரிந்து விடும்.

மனச்சோர்வு என்பது...?

- எதைப் பார்த்தாலும் வெறுப் பாக இருக்கும்.
- யாரைப் பார்த்தாலும் எரிச்சல் வரும்.
- மனதுக்குள் தோற்றுவிட்டதுபோல் ஒரு வெறுமை உண்டாகும்.

அப்படியானால், மனச்சோர்வு என்ற எதிரியை உள்ளே அனுமதித்துவிட்டீர்கள் என்று அர்த்தம்!

மனச்சோர்வு எதனால் வருகிறது?

அடிப்படையில் உங்களுக்கு என்ன நிகழ்கிறது?

நீங்கள் விரும்பியபடி யாரோ நடக்கவில்லை. எதிர்பார்த்தபடி எதுவோ நிகழவில்லை. ஆசைப்பட்டபடி வாழ்க்கை அமையவில்லை.

சுருக்கமாகச் சொன்னால், உங்களுக்கு என்ன கிடைத்திருக்கிறதோ, அதை ஏற்றுக்கொள்ள முடியாமல், நீங்கள் தவிக்கிறீர்கள். அதை எதிர்க் கிறீர்கள்.

நவீன விஞ்ஞானத்தில் இதற்கு கவுன்சிலிங் என்ற முறையை கையாள்கின்றனர். இந்த கவுன்சிலிங் முறையைப் பயன்படுத்தி ஒரு குறிப்பிட்ட தொகையை பெற்றுக் கொண்டு, புத்துணர்வு தரும் சில செயல்களை விளக்கிக் கூறிய மனிதர்களின் மனோநிலையை சரி செய்துவிடுவதாக கூறுகின்றனர்.

ஆனாலும், அந்த ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு மனம் சாந்தமடைந்தாலும், ஏதோ ஒரு காலத்தில்... ஏதோ ஒரு செயலில் மீண்டும் மனம் சோர்ந்துவிடும்...

தற்காலத்தில் இதை மனச்சோர்வு என்று கூறினாலும், அக்காலத்தில் இதை வேறு வழிமுறையில் கையாண்டுள்ளனர் நமது முன்னோர்கள்.

இப்பிறவியின் மாயையை உணர்ந்த மனம் இந்த மாயையின் பிடியிலிருந்து தப்பிக்க நினைப்பதாகவே கருதினர்.

இவ்வாறு தப்பிக்க நினைத்தவர்கள்தான், பட்டினத்தார், அருணகிரிநாதர், ஔவையார், கண்ணப்ப நாயனார் போன்ற எண்ணற்ற மகான்கள்.

உதாரணத்திற்கு சொல்ல வேண்டுமானால்... பொன், பொருள், ஆடம்பரம் என்று தனதுமனதை அலையவிட்டுக்கொண்டிருந்த பட்டினத்தா ரின் மனோ நிலையை தெய்வீகத்தின் பக்கம் திருப்பி அவரை மனிதப் பிறவியிலிருந்துவிடுவிக்க நினைத்த இறைவன், அவருக்கு மகனாக தோன்றி "காதறுந்த ஊசியும் வாராது காண்" என்ற ஒன்றை வார்த்தையின் மூலம், அவரிடமிருந்த பொன், மண், ஆடம்பரவாழ்க்கை, ஆசா பாசம், சொந்த பந்தம் போன்ற சங்கிலியை விடுவித்து ஆண்டியாக, அய்யனை தேட வைத்து இப்பிறவியின் நோக்கத்தை நிறைவேற்ற உதவினார்.

குடும்பம், கணவன், பந்த பாசம் மட்டுமே வாழ்க்கை என்றிருந்த ஔவையாருக்கு, இதற்கும் மேல் ஒன்று உள்ளது என்பதை இறைவன் காட்டியபின்புதான், ஔவையார் தனது குடும்பம், சுகபோக வாழ்க்கை, அழகு போன்றவற்றை துறந்து மனித வாழ்க்கையை கடந்தார்.

உல்லாசம் மிகுந்தவாழ்க்கை மட்டுமே உலகம் அல்ல என்பதை உணர்ந்த அருணகிரிநாதர் உலகிற்கும் மேலான ஒருவனை நாடிய போது மிகப்பெரிய மகானாக மாறினார்.

முன்ஜென்ம கர்மாவின் தொடர்பால், கல்லாக காட்சியளித்த லிங்கத்தை மானசீகமாக ஏற்று உறவுபாவத்துடன் அக்கல்லை அனுகியபோது, அக்கல்லிற்குள் வீற்றிருந்த இறைவன் தன் கண்ணை இழந்து காட்சி அளித்ததைபொறுத்துக் கொள்ள முடியாத கண்ணப்பன்,தன் கண்ணையே தோன்டி அக்கல்லிற்கு பொருத்தினான், கல்லிற்குள்ளும் இறைவன் உள்ளான், என்பதை தனது அன்பின் வாயிலாக வெளிக்காட்டிய கண்ணப்ப நாயனாரை ஆட்கொண்டான் இறைவன்.

இதுபோன்று, இவர்களைப் போன்று, இக் காலத்தில் மனிதப் பிறவியைப் பற்றியும், அந்த பிறவியின் நோக்கத்தை நிறைவேற்றும் வழி முறையும் தெரியாமல் தவிக்கிறோம்.

அஞ்ஞானத்தால், விஞ்ஞானமே பெரியது என்ற போதையில் திரிகிறோம், சுகபோக வாழ்க்கை இருக்க, ஞானமார்க்கத்தை மறுக்கிறோம்.

இந்த நிலையிலிருந்து சிறிது மாறுபட்டு சிந்தித்தோமானால் இப்பிறவி பயன் என்ன என்பதை எளிதாக தெரிந்து கொள்ளலாம்.

இதற்கு நமக்கு கிடைத்த எளிய வழிமுறையே தியானம், யோகம்.

முடிந்த அளவிற்கு இந்த தியானத்தையும், யோகத்தையும் தொடர்ந்து செய்யும்போது,அண்ட சராசரங்களைப் பற்றிய தெளிவு ஏற்பட அதிகப்படியான வாய்ப்புஉள்ளது.

தியானம் கணக்கிடலங்கா பயன்களை உங்களது உடல், மனம் மற்றும் ஆத்மாவிற்குத் தருகின்றது. ஆழ்ந்த தூக்கத்தில் கிடைக்கும் ஓய்வினை விட தியானத்தில் கிடைக்கும் ஓய்வு அதிகம். அதிக ஓய்வின் பயனாக அதிக அளவில் செயல்பட முடியும்.

தினமும் குறிப்பிட்டநேரத்தை தியானத்திற்கு செலவழிக்கும் போது, தியானத்தினால் உங்கள் விழிப்புணர்வு பரிணாம வளர்ச்சியடைந்து, காலப் போக்கில் உயர்ந்த சீரிய அனுபவங்களைப் பெற முடிகிறது.

உங்கள் விழிப்புணர்வு பரிணாம வளர்ச்சியடையும்போது விரிவடையும்போது, வாழ்வில் ஏற்படும் தொல்லைகள் புறக்கணிக்கும் ஆற்றல் எளிதாக கிடைத்துவிடும்.

இந்த ஆற்றல் கோபம், ஏமாற்றம், ஆகியவற்றை பகுத்து ஆராயும் அறிவை கொடுத்துவிடும். இதனால் ஏற்படும் மனச் சுமையை குறைக்க உதவும்.

இந்த மனச் சுவை குறைந்ததும் அவை உணர்ச்சிகளாகி விடுகின்றன. இந்த க்ஷணத்தில் மனித வாழ்க்கையை தாக்கும் இதுபோன்ற இடர்களை அடையாளம் காணத்துவங்கிவிடுவீர்கள்.


ஆழ்ந்த தியானம் என்பது உண்மையான தனித்துவ மாற்றத்தைத் ஏற்படுத்தும். உங்களைப் பற்றி நீங்கள் அறிந்து கொள்ளும்போது, மேலும் அதிகமாக வாழ்வின் மர்மங்களையும் இந்தப் பிரபஞ்சத்தைப் பற்றியும் அறிந்து கொள்ள விரும்புவீர்கள்.

அப்போது, வாழ்க்கையின் பொருள் என்ன? வாழ்வின் நோக்கம் என்ன? இந்த உலகம் என்ன? அன்பு என்பது என்ன ? ஞானம் என்பது என்ன? போன்ற கேள்விகள் எழத் துவங்கும். இத்தகைய கேள்விகள் எழும்போது, நீங்கள் அதிர்ஷ்டசாலி என்று எண்ணிக் கொள்ளுங்கள்.

இந்தக் கேள்விகள் புரிந்து கொள்ளப் பட வேண்டும். இவற்றுக்கு விடைகள் புத்தகங்களில் கிடைக்காது. வாழ்ந்து பார்க்கும்போதுதான் வாழ்வின் மாற்றங்களை அதிக அளவில் காண்பீர்கள்.

இந்த இடத்தில் உங்களுக்கு ஊன்றுகோலாக இறைதேடல், பூஜை, யோகம் போன்றவை எளிதாக வழிகாட்டத் துவங்கும்.

மனித வாழ்க்கையின் நோக்கத்தை படிப்படியாக கடக்கும்போது நிச்சயம் பந்தபாசம், உறவு



www.aanmeegamalar.com



Scan to Read
aanmeegamalar Website



மாதம் இரண்டு முறை இலவசமாக வெளிவரும்
"ஆன்மிகமலர் மெயில் புத்தகம்"
aanmeegamalar.com
இணையதளத்தில் இலவசமாக டவுன்லோடு செய்தும் படிக்கலாம்


முறை, ஆடம்பரவாழ்வு, சுகபோகம், சிற் றின்பம் போன்றவை நிலையற்றது என்பது விளங்கும் போது, மனம் தன்னால் பேரின்பத்தை நாடி செல்லத்துவங்கும்.

உடலால் மட்டும் கிடைக்கும் இன்பங்களை சிற்றின்பம் என்றும், உடலுக்கும் மனதுக்கும்சேர்த் தே கிடைக்கும் இன்பத்தை பேரின்பம் என்றும் மனம் வேறுபாடு காணும் நிலை ஏற்பட் டால். உங்கள் மனம் தாமரை இலையாக மாறிவிடும்.

எவ்வளவு அடர்ந்த நீரிலும் மிதக்கும் தாமரை இலையில் நீர் ஒட்டாமல் இருப்பது போன்று, குடும்ப வாழ்க்கையில் இருந்தாலும் கூட, சிற்றின்ப சுகபோகங்கள் நம்மை தாக்காது.

இந்த வகையில் தியானம், யோகம், பக்திமார்க் கத்தை கையில் எடுக்காமல் தவிப்போரின் மனம் எப்போதும் மனச்சோர்வுடன் இருக்கும்.



மற்றவர்கள் உங்களைப் புரிந்து கொள்ள வேண்டும் என்று ஆசைப்படுவீர்கள்.

உங்களுடன் உட்கார்ந்து மற்றவர்களும் அழ வேண்டும் என்று விரும்புவீர்கள்.

இரக்கத்தை யாசிக்க தோன்றும்.

உங்கள் விருப்பப்படி எல்லாம் உலகம் நடக்க வேண்டும் என்று என்னத் தோன்றும்.

வெளியே இருந்து ஆயுதங்களால் தாக்குபவர்களைக் கூட சரியாகக் கையாண்டால், சமாளித்து விடலாம். ஆனால் மனச்சோர்வு என்பது உள்ளிருந்து கொண்டே, கீறிக் கிழித்துக்குடைந்து உங்களை உபயோகமில்லாமல் அழித்து விடும் விஷஆயுதம். உங்களை நீங்களே அழித்துக் கொள்வதைப் போன்ற முட்டாள்தனம் அது!

சின்ன சின்ன விஷயத்திற்கு கூட மனம் அல்லல் படும், ஒரு தீக்குச்சி பற்றவில்லை என்றால் கூட துக்கமாகிவிடுவார்.

ஒவ்வொரு திருப்பத்திலும் அச்சம் வரும். நம்பிக்கை குறைந்து காணப்படும்.

இதுபோன்ற பிரச்சனை இருந்தால் கண்டிப்பாக நீங்கள் மருந்து, மாத்திரை, கவுன்சிலிங் போன்றவற்றை தேர்ந்தெடுப்பதைக் காட்டிலும், தியானம் யோகம் போன்றவற்றில் உங்கள் மனதை திருப்பினால், ஆன்மிக புத்தகங்கள், கோவில் குளம் போன்றவற்றில் உங்கள் புத்தியை செலுத்தினால் உங்கள் அஞ்ஞானம் மெய் ஞானத்தை நோக்கி எளிதாக செல்லும்.

உலகத்தின் மீது கோபம் கொள்ளாதீர்கள். உங்கள் குறைகளை உணர்ந்து அவற்றை மாற்றிக் கொள்ளக் கிடைத்த அற்புதமான வாய்ப்பாக எடுத்துக் கொண்டு செயல்பட்டால் போதும்.

வலிகளும், வேதனைகளும் நிரம்பிய அனு பவங்களையே வாழ்க்கைப் பாடங்களாக ஏற்று, தியானம், யோகம் போன்றவற்றின் மூலம் உங்களைப் பக்குவப் படுத்திக் கொள்ள வழங்கப் பட்ட வரம் இது!

பாதையைதேடி.
போன்: 9444228203

www.aanmeegamalar.com

Owned, Published by CV.NATARAJAN. Design by SML.GRAPHICS, CHENNAI. Published from No.18, B.E. Colony, Kodambakkam, Chennai - 600 024.
Editor : CV.NATARAJAN, Cell: 9444228203.
Website: www.aanmeegamalar.com / E-mail: aanmeegamalar@gmail.com

# விருப்ப சந்தா செலுத்த










விருப்ப **சந்தா**

**UPI மற்றும் வங்கி வாயிலாகவும் சந்தா செலுத்துங்கள்...**

बैंक ऑफ़ बड़ौदा
Bank of Baroda

BHIM Baroda Pay
SCAN TO PAY
WITH ANY BHIM UPI APP
Merchant Name : AANMEEGA MALAR TRUST

UPI

**AANMEEGA MALAR TRUST**
**ACCOUNT NO. 49510100003648**
**IFSC CODE: BARB0KODAMB**
**(FIFTH CHARACTER IS ZORO)**
**BANK OF BARODA (KODAMBAKKAM BRANCH)**